Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை (16.10.2011) பக்கங்கள் 16 ஓசை – 16

ரா
ம்
கோ


MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/984)



பாரம்பரிய கலைகளுக்கு... 05



தமிழர்களின் காத்தற் கடவுள்கள் 14




மாற்றம் வந்தால் தடுப்போம் 09



கர்வம் தவிர் 11

## புலிகளின் அனைத்து இரகசியங்களும் தனக்கே தெரியும் என்கிறார் கருணா



(கொழும்பு)

வெளிநாடுகளில் வாழும் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான பெருந்தொகையான பணம் சுவிஸ் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சரான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது இலங்கையைச் சேர்ந்த எந்தத் தமிழரும் வெளிநாட்டுப் புலிகளுக்கு பணம் அனுப்புவதில்லை என்றும் கூறியுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)


## தொல்பொருள் சின்னங்களைக் காட்டி பிரச்சினைகளை சிக்கலாக்கும் அரசு

(கொழும்பு)

வடக்கில் 400 இடங்களில் தொல்பொருள் இருப்பதாக தொல்பொருள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதன் மூலம் அப்பகுதிகளில் சிங்கள மக்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுமானால், இருக்கின்ற பிரச்சினையை அது மேலும் சிக்கலாக்கும் என புளொட் தலைவரும், வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தொல்பொருள் திணைக்களம் 400 இடங்களை அடையாளமிட்டுள்ளது. இது தொடர்பாக, புதைத்து வைத்துவிட்டு மீண்டும் எடுப்பதும், இல்லாத இடங்களில் தொல்பொருள் இருப்பதாகக் காட்டுவதையும் நாம் கடந்த காலங்களில் கண்டுள்ளோம்.

அதற்காக முற்றுமுழுதாக அப்படி ஒரு (15ஆம் பக்கம் பார்க்க)



# அடுத்த தேர்தலுக்கு முன்னர் விருப்பு வாக்குமுறை நீக்கம்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த பொதுத்தேர்தலுக்கு அல்லது உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் தேர்தல் சட்டம் மாற்றப்பட்டு, விருப்பு வாக்குத் தேர்தல்முறை ஒழித்துக் கட்டப்படுமென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த எண்ணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றக்கூடிய ஒரு சூழல் இன்று நாட்டில் தோன்றியிருக்கிறது. முல்லேரியா அசம்பாவிதங்களையடுத்து எதிர்க்கட்சியினர் கூட தேர்தல் முறை மாற்றப்பட்டு விருப்பு வாக்கெடுப்பு முறை இல்லாமல் செய்யப்படவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள் என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இன்று நாட்டில் அதிகரித்து வரும் தேர்தல் வன்முறைகளுக்கு பிரதான காரணமாக இந்த விருப்புவாக்கு முறையே இருந்து வருகிறது என்று சுட்டிக்காட்டிய டலஸ் அழகப் பெரும, தேர்தல் சட்டத்தை மாற்றியமைப்பதற்கு ஜனாதிபதிக்கு எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் அதன் மூலம் தேர்தல் வன் முறைகளை கணிசமானளவுக்குக் குறைத்துவிடலாம் என்றும்,

சமீபத்திய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எவ்வித வன்முறைகளும் ஏற்படாதிருந்த (15ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளையில் ஈடுபட்டோர் மக்களால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

கொள்ளை மற்றும் மக்களை மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற சம்பவங்களில் சம்பந்தப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவரொருவர் உட்பட 4 பேர் கொண்ட குழுவொன்றை நேற்று முன்தினம் பொதுமக்கள் மடக்கிப்பிடித்துள்ளனர்.

இக் குழுவினர் தங்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவை சேர்ந்தவர்கள் எனக் கூறி உசன் - மிருசுவில் பகுதியில் அமைந்துள்ள ஒரு வீட்டினுள் நுழைந்ததாகவும், பதிவு செய்வதற்காக வருகை தந்திருப்பதாகக்கூறி, பின் குடும்ப அங்கத்தவர்களை மிரட்டி அங்கிருந்த ஒரு இலட்சத்து ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசியை திருடி (15ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்முடன் அரச குழு பேச்சு?

(கொழும்பு)

இலங்கையின் விடயத்தில் பொறுமை இழந்து விட்டதாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அறிவிப்பை தொடர்ந்து இலங்கை அரசின் சமாதான பேச்சுவார்த்தை குழுவினர் நோர்வே சென்றுள்ளனர்.

இலங்கையின் சமாதானப் பேச்சுக் குழுவின் தலைவராக இருந்த அமைச்சர் நிமால் சிறீபால டி சில்வா தலைமையிலான குழுவினர் நோர்வே சென்று நோர்வேயின் இலங்கைக்கான சமாதானத் தூதுவரும் நோர்வேயின் (15ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்டத்தின் பொறுப்பான அதிகாரியை மன்னிப்புக் கேட்க கோருவது அநாகரிகம்

### கண்டிக்கிறார் அரச அதிபர்





(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக மாணவிகளை கட்டாயப்படுத்தி சுலோக அட்டைகளை ஏந்தவைத்து போராட்டம் செய்யத் தூண்டியதும், மாவட்டத்தின் பொறுப்புவாய்ந்த அதிகாரியான என்னை மன்னிப்புக் கேட்கும்படி தெரிவித்ததையும் வன்மையாகக் கண்டிப்பதாக, அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவிகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவே தெரிவித்திருந்தேன். அவர்கள் பாலியல் நடவடிக்கைகளில் (15ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க உதவியை நாடிய பொன்சேகா

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று இரண்டு தினங்கள் செல்லும் முன்னர், தான் உள்ளிட்ட தமது குடும்பத்தினர் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்குமாறு முன்னாள் இராணுவ தளபதியும், எதிர்க்கட்சியின் பொது வேட்பாளருமான சரத் பொன்சேகா அமெரிக்க அரசாங்கத்திடம் (15ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய பிரதமரின் அழுத்தத்தால் கொமன்வெல்த்தில் வருமா பிளவு?

(பேர்த்)

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டும் என்று கனேடியப் பிரதமர் கொடுத்து வரும் அழுத்தங்களால் இரண்டு வாரங்களில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் மாநாட்டில் பிளவுகள் ஏற்படலாம் என்று கனேடிய ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டில், கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் மேற்படி விவகாரத்தை எழுப்பவுள்ளார்.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் தமக்குத் திருப்தி தராது போனால் 2013 இல் இலங்கையில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் தலைவர்களின் மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொமன்வெல்த் மாநாட்டில், இதுதொடர்பாகக் கலந்துரையாடப்படும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும், பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் த்னது நிலைப்பாட்டை அங்கு தெளிவுபடுத்துவார் என்றும் கனேடியப் பிரதமரின் தொடர்பாடல்களுக்கான இணைப பணிப்பாளர் அன்ரு மக் டௌகல் தெரிவித்துள்ளார். கனேடிய ஊடகம் ஒன்றில் ஒரு மாதத்துக்கு முன்னர் நடத்தப்பட்ட வட்டமேசைக் கலந்துரையாடல் (15ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அருங்கலைகள் பேரவைக்கு வியட்னாம் முதற்பெண்மணி விஜயம்




(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தேசிய அருங்கலைகள் பேரவைக்கு வியட்னாம் ஜனாதிபதியின் பாரியர் ஆயிதி என்ட் நேற்று முன் தினம் மாலை விஜயம் செய்தார்.

கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இந்தப் பேரவைக்கு வருகை தந்த அவர் அங்குள்ள விற்பனைக் கூடங்களைப் பார்வையிட்டதுடன், பாரம்பரியக் கலைகளையும் (15ஆம் பக்கம் பார்க்க)

# ‘பக்தியின் மொழி தமிழ்’ நூல் மாந்தரை நல்வழிப்படுத்தும்

## பேராசிரியர் வேல்நம்பி புகழாரம்



(குருநகர்)

தறிகெட்டுச் சென்றுள்ள, சென்றுகொண்டிருக்கும் மாந்தரை நல்வழிப்படுத்தக்கூடியதாக இந்த ‘பக்தியின் மொழி தமிழ்’ என்னும் நூல் தொகுப்பு அமைந்துள்ளது.

யாழ். கம்பன் கழக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய பக்தியின் மொழி தமிழ் நூல் வெளியீட்டு விழாவில் நயப்புரை வழங்கிய பேராசிரியர் தி.வேல்நம்பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வு கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடந்தேறியது. இந்நிகழ்வில் பேராசிரியர் தொடர்ந்தும் தெரிவிக் கையில்,

இந்நூலில் நாயன்மார்களின் பாடல்களை நயப்பது ஒன்றும் அவசியமில்லை. நாயன்மார்கள் பாடல்களில் பாடிய சிந்தனைகளை மனோன்மணி அம்மையார் சிறப்பாக இலகு தமிழில் விளங்கச் செய்திருப்பதை புதிதாக நயக்கக்கூடியதாக உள்ளது என்றார்.

தலைமையுரையாற்றிய கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் இந்து சமயத்தை ஆராய முற்படுபவர்களுக்கும், சிறார்களை ஆற்றுப்படுத்தவும் இந்நூல் பெரிதும் உதவக்கூடியதாக படைக்கப்பட்டுள்ளது. 3000 பாடல்களை நாயன்மார்கள் பாடிப் போந்துள்ளனர். அவற்றிலிருந்து 154 பாடல்களை வைத்து அம்மையாரால் எழுதப்பட்ட பக்தி பத்தி எழுத்துக்களின் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.


பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த எண்பதுகளிலிருந்தே தமிழ்ப் பணிகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். அந்தத் தொடர் இன்றுவரை நீடித்துக் கொண்டிருக்கிறது என்றார்.

ஏற்புரையில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கூறியதாவது,

துன்பம் வரும்போது எனக்கு சிரிப்புத்தான் வரும். ஏனெனில் துன்பத்தின் பின்பாக இன்பந்தானே என்பதால். மந்திரமாவது நீறு என்று தொடங்கும் தேவாரமே எனது காதுகளில் நுழைந்த முதல் தேவாரமாக இருக்கும் என எண்ணுகிறேன்.

முன்பள்ளியில் சேர்ந்து படிக்கும் காலத்தில் ஆசிரியை சொல்லித் தந்ததாக அது அமைந்தது. தேவாரங்களை எவ்வாறு இந்தக் காலகட்டங்களில் பயன்படுத்துவதென லண்டன், ஜேர்மன் போன்ற நாடுகளுக்குப் போயிருந்த சமயம் அங்கிருக்கும் ஆசிரியைகள் என்னிடம் வினவினர். அதன் காரணமாக இந்த பக்தி பத்தி எழுத்துக்களை எழுதத் தொடங்கினேன். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர் ஆகிய 4 நாயன்மார்களின் ஞானப் பரிமாணங்களை தேவார திருவாசகங்களை நுகரும் போதே முழுமையாக அனுபவிக்க முடியும் என்றார். (68)

# விவிலியக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் நேற்று ஆரம்பமாகிய மாபெரும் திரு விவிலியக் கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது.

மாதகல் பங்கு மறையாசிரியர்களின் அயராத உழைப்பினால் உருவாக்கப்பட்ட திரு விவிலியக் கண்காட்சியானது நேற்றுக்காலை 9.00 மணியளவில் ஆரம்பமானது.

நேற்றைய நாள் நிகழ்வில் குறும்படம், உலகப் படைப்பு, திருவிவிலியம், அன்பியம் போன்ற பயனுள்ள தகவல்களுடன் நடைபெற்றது. மற்றும் விசுவாசம் என்னும் தொனிப் பொருளில் சில்லாலை பாடசாலை அதிபர் பங்கிராஸ் சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து புனித செபஸ்தியார் ஆலயத்தில் கலை நிகழ்வுகளும், கண்காட்சியில் கேட்கப்பட்ட வினா விடைப் போட்டிக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

மாதகல் பங்குத்தந்தை அருட்திரு ஆனந்தகுமார் அடிகளாரின் நெறிப்படுத்தலில் இக்கண்காட்சி இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இன்றைய தினமும் இக்கண்காட்சி நடைபெறவுள்ளது. (அ)

# விஷமிகளால் வலை சேதம்

(கரணவாய்)

குடத்தனை பொற்பதி கிராமத்தில் கடற்தொழில் செய்து வரும் ஜெயபாலன் என்பவருக்கு சொந்தமான பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் முழுவதும் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் அசிற் ஊற்றி அழிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக உரியவர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் சந்தேகத்திற்கிடமானவர்களை கைதுசெய்ய அவர்களது வீட்டுக்குச் சென்ற போது அவர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-18)

# சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

லயன்ஸ் கழக அனுசரணையில் வெள்ளைப் பிரம்பு தினம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் யாழ். மாவட்ட விழிப் புலனற்றோர் சங்கத் தலைவர் ஆசைப்பிள்ளை மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத் தலைவர் டி.எஸ்.லெனாட், யாழ். மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆசைப்பிள்ளை மகேந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினர் உரையையும், யாழ். விழிப்புலனற்றோர் சங்க ஸ்தாபகர் விஜயராஜசிங்கம், விழிப்புலனற்றோர் சங்க முன்னாள் தலைவர் சிவகுமாரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர் உரையையும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து விழிப் புலனற்ற உறவுகளின் பாடல்கள், கவிதைகள் என்பன இடம்பெற்றன. விழிப்புலனற்றவர்களுக்கு மதிய போசனம் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத் தலைவர் டி.எஸ்.லெனாட், யாழ். மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆசைப்பிள்ளை மகேந்திரன், விழிப்புலனற்றோர் சங்க செயலாளர் அ.கமிலஸ், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், லயன்ஸ் கழக செயலாளர் ரி.அன்பானந்தன், யாழ். லயன்ஸ் கழக முன்னாள் தலைவர்களான வே.ஞானகாந்தன், எஸ்.தியாகலிங்கம் மற்றும் விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எஸ்)

## கவனயீனத்தால் சிறுமி காயம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சிய பால் உடலில் தவறுதலாக கொட்டியதால் 6 வயதுச் சிறுமி காயம் அடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சாயிகீர்த்தனா என்ற சிறுமியே உடலில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## விடுதி உரிமையாளருக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தண்ணீர், சக்தி மற்றும் கழிவு முகாமைத்துவம் சம்பந்தமான விடயங்களில் விடுதி (ஹொட்டல்) உரிமையாளர்களுக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நாளை காலை 8.10 மணி முதல் 10.30 மணிவரை யாழ். ரில்கோ ஹொட்டலில் நடைபெறவுள்ள இவ் இலவச கருத்தரங்கினை இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களை 077 7773796 என்ற இலக்கத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## புள்ளிகளை அனுப்பவும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற தரம் 11 மாணவர்களுக்கான சைவ சமய முன்னோடிப் பரீட்சைக்கான புள்ளிகளை அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

மாணவர்களுடைய பரீட்சை விடைத்தாள்களை சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்கள் திருத்தம் செய்து மாணவர்கள் பெற்ற புள்ளி, பகுப்பாய்வு அறிக்கையை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-11)

## தாதியர்களுக்கு ஆங்கிலக் கல்வி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊக்கமிகு தாதியர் சங்கம் அனைத்து தாதிய உத்தியோகத்தர்களுக்கும் ஆங்கிலக் கற்கைநெறியினை நடத்தவுள்ளது.

இக்கற்கைநெறியின் அறிமுக வகுப்பு இன்று முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் பின்னர் 12.00 மணி தொடக்கம் 1.00 மணிவரையிலும் இரு பிரிவாக யாழ். ஊக்கமிகு தாதியர் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளதாக இச்சங்கத்தின் தலைவர் சி.சத்தியேந்திரா அறியத்தந்துள்ளார். (39)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் வயோதிபர் படுகாயம் அடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் நல்லூர் அரச வீதியைச் சேர்ந்த எஸ்.சோமதாஸ் (வயது 46) என்ற வயோதிபரே முகத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)


## வாழ்த்துகின்றோம்



மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள், கல்வி அமைச்சின் உயரிய விருதான ஆசிரியர் பிரதீபா பிரபா - 2011 என்னும் விருதினை சாவ.மட்டுவில் தெற்கு அ.மி. பாடசாலை அதிபர் **வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்** B.A அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்துள்ளார்.

ஆசிரியர் சுந்தரலிங்கம் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தின் புகழ்பெற்ற கரப்பந்தாட்ட வீரராகவும், சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கி வருவதுடன், எமது சனசமூக நிலையத்தின் முக்கிய உறுப்பினராகவும் இருந்து கிராமத்திற்கும் மக்களுக்கும் பெருமை சேர்த்தமைக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மோகனதாஸ் விளையாட்டுக் கழகம்
மோகனதாஸ் சனசமூக நிலையம்
மட்டுவில், சாவகச்சேரி.
(C/593)

## அறிவித்தல்

**பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் - வேலணை**

மேற்படி கோயிலின் விஷேட பொதுக்கூட்டம் 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறும். எனவே தொடர்புடைய அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மு.நந்தகோபாலன்,
பிரதேச செயலர்,
தீவுகள் தெற்கு, வேலணை (C/594) 13.10.2011

மேகங்கள் கரையும்வரை பொறுத்திருந்தால் தான் சூரிய ஒளியைப் பார்க்க இயலும் அது போல அறியாமை அகலும்வரையில் பொறுமையாகப் பிரார்த்தனை செய்தால் தான் இறையருள் கிடைக்கும்.

- பாபா-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மற்றவர்களுடன் வாழும் கலை!

நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, தமிழர்களுக்கென்று தனியே ஒரு குணம் உண்டென்றால், அது மற்றவர்களைத் தமக்குச் சமமாக எடுக்க முடியாத குணம்தான் என்று சொன்னார். தனக்கு அதிகமும் தெரிந்தது யாழ்ப்பாணத் தமிழர்களைத்தான் என்பதையும் சேர்த்துச் சொன்னார். யாருடனும் இணக்கம் காண முடியாத அல்லது விரும்பாத குணமே நம்மை எப்போதும் போர் ஆவேச மனநிலையிலேயே வைத்திருக்கிறது என்றார்.

நம்மை உயரத்தில் தூக்கிவைத்துப் பேசுபவர்களை – நாம்தான் சரி என்று ஆமோதிப்பவர்களைத் தூக்கிவைத்துக் கொண்டாடுவதும், நம்மைக் கொஞ்சம் விமர்சித்து விட்டாலும் துரோகி என்று உறவைத் துண்டாடுவதுமாக மிகுந்த சுயநலத்தோடு இறுகிவிட்ட சமூகமாக இருக்கிறோம். இதைச் சொல்வதற்குக் கூட எதிர்ப்பாக ஒரு பொங்கு தமிழ் ஆட்டத்தை ஆடி முடித்துவிட தமிழினம் தயார்நிலையிலேயே இருக்கிறது.

வாழ்வு பற்றிய நமது அடிப்படை மனோபாவமே மாற்றமடைய வேண்டியிருக்கிறது. பழிவாங்குதலோ பகை தீர்த்துக் கொள்ளுதலோ அல்ல, இணக்கம் காண்பதே வெற்றிகரமான வாழ்வுக்கு வழி என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இணக்கம் காண்பது இழிவுடைய செயலாகவும், இன்னா செய்தோர்க்குப் பதில் இன்னா செய்து காட்டுவதே என்றும் அதுவே மானமிக்க மனிதன் செயல் என்றும் நமக்கிருக்கும் வீர ரோச மனோபாவங்கள், எல்லோர்க்குமான நல்வாழ்வை உத்தேசித்து மாற வேண்டியிருக்கிறது.

நல்லிணக்க மார்க்கத்தை யோசித்துப் பார்ப்பது என்பது தோல்வியோ அவமானமோ ஆகிவிடாது; வாழ்வை வெற்றிகொண்டோம் என்றாகுமெனில்... ஏன் முயற்சிக்கக் கூடாது? உடனேயே 'அவர்களை முதலில் திருந்தச் சொல்' என்று நாயகன் பட வசனத்தோடு வந்துவிடுவது எல்லோர்க்கும் சுலபம். நாம், உள்ள நிலைமையையும் உலக நிலைமையையும் புரிந்துகொண்டு மனப்பூர்வமாக முயற்சித்துப் பார்க்கிறோமா – பார்க்கத் தயாராக இருக்கிறோமா என்பதையே முதலில் கேட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அவலங்கள் நீங்கிய மானுட நல்வாழ்வு குறித்து உண்மையாக அக்கறைப்படுபவர்கள், மனிதர்கள் மற்றும் உயிர்வாழ்க்கை மீதான தங்களது அன்பை வெளிக்காட்ட வேண்டிய தருணம் இது. அதாவது, மற்றவர்களிடம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதோ தொடக்கம் அவர்களிடமிருந்தே வரவேண்டும் என்றோ ஒவ்வொருவரும் தத்தம் ' சரி ' களுடன் காத்துக் கொண்டிருப்பது அல்ல. நல்லிணக்கம் என்பதை நம்மிடம் இருந்து தொடங்க என்ன வழி என்றே ஒவ்வொருவரும் கண்டறிந்து முன்காலடியை வைப்பதற்கு மனங்கொள்ள வேண்டும். இந்தப் பாதையையும் நாமேதான் முனைந்து உருவாக்கியாக வேண்டும். நாமும் மற்றுமுள்ள மனிதர்களும் இணங்கி இசைந்தொன்றாய் வாழும் வழி இங்கு காண நமக்குள் அந்தப் பேரன்பு கூட வேண்டும்.

உயிர்த் தோற்றத்திற்கு அத்திவாரமாகவும், வாழ்வுக்கு ஆதார சுருதியாகவும், எல்லா இன்பங்களுக்கும் மூலமாகவும் அமைந்திருக்கிறது அன்பு. மற்றவர்களுடன் வாழ்வது என்ற கலையின் அடிப்படையே அன்புதான். வாழ்வதற்கான இச்சையின் ஆதிவல்லமை அன்புதான்; அன்பின் மேல் கட்டப்பட்ட அறம்தான். நீதி, கருணை, சகோதரத்துவம், காதல், பாசம் என்றெல்லாம் பலநூறு முகம்கொண்டு அதுதான் மனிதனைக் கூடி வாழச் செய்தது; சமூகமாக ஆக்கியது; விலங்குகளின் தலைமகனாக நிறுத்தியது. இனிமேலும் அதுவே நம்மை அழிவிலிருந்து மீட்கக் கூடும். அன்பு செலுத்த இயலாமல் போவதே நரகம் என்பதை நாம் உணர்ந்துகொள்ளக் கூடும்.

மனித மனதின் அடிப்படையிலேயே ஒரு குரூரம் பதிவடைந்து கிடப்பதை நாம் உணருகிறோமா? நம் கல்வி முறைகளிலேயே அந்த குரூரம் கற்பிதம் செய்யப்பட்டு வளர்க்கப்படுகிறது அல்லவா? இல்லாவிடின் ஏன் விட்டுக்கொடுப்புகள் இல்லாமல் போகிறது? பேசி இணக்கம் காணும் நம்பிக்கையின்றிப் போகிறது? தேசப்பற்று என்கிறோமே அது என்ன? எதற்காக, ஏன் இவ்வளவு வன்மம்? பலிகள்? வாழ்வைச் சிதைப்பதில் குரூரத் திருப்தி?

உண்மையான மனிதநேயம் என்பது பகைவெறுப்பையோ விரோதத்தையோ தூண்டும் விதமாக இராது; மக்களை அவற்றிலிருந்து மீட்டு இணக்கத்தினால் உருவாகும் இன்ப வாழ்வுக்கு இட்டுச் செல்வதாக இருக்கும்.

– ஆசிரியர்

# மீள்குடியேறிய மக்களின் வீடுகளுக்கு ஒரு வருடத்திற்கே இலவச மின்சாரம்

## கிளிநொச்சி மின்சாரசபை பிரதம பொறியியலாளர்

(கொழும்பு)

வடக்கின் வசந்தத்தின் ஊடாக மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மின்சாரத்தில் வீடுகளுக்கு மட்டுமே ஒரு வருடத்திற்கான இலவச மின்சாரம் வழங்கப்படும் என மின்சார சபையின் கிளிநொச்சிப் பிராந்திய பிரதம பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கின் வசந்தத்தின் மூலம் வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை இம்மாதத்தின் முதலாம் திகதியில் இருந்து நிறுத்துமாறு அரசினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வந்துள்ள போதிலும், இதுவரையில் சுற்று நிருபம் எனது கையில் கிடைக்கவில்லை. அது கிடைத்த பின்னரே முழுமையான விபரங்களைத் தெரிவிக்க முடியும்

எனினும், ஏற்கனவே மின்கம்பிகள் இணைக்கப்பட்ட பிரதேசங்களில் மின்சாரத்தை பெறாதவர்களுக்கே இலவச மின்சார இணைப்பை பெற முடியாதிருக்கும். மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் மின்கம்பங்களும், மின்கம்பிகளும் இணைப்பதில் மின்சார சபையினால் தாமதம் ஏற்பட்டிருப்பின் மாத்திரம் மின்சார சபையின் பிராந்திய காரியாலயத்தின் பரிந்துரைகளுக்கு அமைய வீடுகளுக்கு மின்சாரம் வழங்க முடியும். மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள காரியாலயங்கள், இராணுவ முகாம்கள் மற்றும் ஏனைய கட்டடங்களுக்கு வழங்கப்பட்ட மின்சாரத்தில் ஒரு வருடத்திற்கான இலவச மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாரவில பகுதியில் அமைதியின்மை

(கொழும்பு)

மாரவில பிரதேசத்திலுள்ள கட்டடமொன்றை இடிக்க முற்பட்ட வேளையில் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இந்தக் கட்டடத்தைத் தகர்ப்பதற்காக நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவிற்கு அமைய நாத்தாண்டி பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

மாரவில நீதவான் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட உத்தரவிற்கு அமைய மாரவில பொலிஸ் பிரிவின் பிச்சவில வீதியிலுள்ள இந்தக் கட்டடத்தினை உடைப்பதற்காக நாத்தாண்டி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதேசத்திலுள்ள சிலர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து தொடர்ந்து நேற்று முன்தினம் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

பொலிஸாரின் தலையீட்டினால் நிலைமை வழமைக்குக் கொண்டுவரப்பட்டதுடன், நீதிமன்ற உத்தரவிற்கு அமைய கட்டடம் நாத்தாண்டி பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான மெக்ஸி புரொக்டர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மதுவரித் திணைக்களம் நடவடிக்கை சட்டவிரோத மதுபாவனை குறைந்தது

(வடமராட்சி)

மதுவரித் திணைக்களத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டினால் வடமராட்சிப் பகுதிகளில் சட்டவிரோத மதுபாவனை குறைந்துள்ளதாக வடமராட்சிப் பகுதி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ஆ.இராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக தெரிவிக்கையில்,

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து தொடர்ச்சியாக இன்று வரை வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பான குற்றங்களில் 57 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் 70 சதவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதை விட அனுமதிப்பத்திரம் பெற்று இயங்கிவரும் மதுபானச் சாலைகள் சுமார் 80 தடவைகளுக்கு மேலாக பரிசோதிக்கப்பட்டநிலையில், அதில் 8 பேருக்கு எதிராக குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளது. இதற்கான உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (உ-116)

## கலை கலாசார நிலையம் அமைப்பு

(வடமராட்சி)

கலை, கலாசார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கரவெட்டி பிரதேச செயலகத்தினால் உடுப்பிட்டியில் கலை, கலாசார நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்நிலையம் அமைப்பதற்கான நிதி இவ்வருட இறுதியில் வழங்கப்படவுள்ளதாகவும், இதற்கான காணியை வடமராட்சி உடுப்பிட்டி நலன்புரிச் சங்கம் அன்பளிப்புச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

80 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக்கலாசார நிலையம் கலை, கலாசார நிகழ்வுகளை நடத்த பயன்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-116)

## புனரமைக்கப்பட்டு வரும் நெடுங்கேணி வீதி

(ஒட்டுசுட்டான்)

புளியங்குளம் ஊடாக நெடுங்கேணி ஒட்டுசுட்டானை வந்தடையும் பிரதான வீதியில் தற்போது வீதிப் புனரமைப்புக்கள இடம்பெற்று வருகிறது.

குறிப்பாக பெரும் பாலான இடங்களில் பாலக் கட்டுமான வேலைகளும் இடம்பெற்று வருவதால் போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்களுக்கு ஏற்ற வகையில் மாற்று வழிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

எனினும், தற்போது பெய்து வரும் கடும் மழையினால் மாற்று வழிப்பாதைகள் சீரற்றுக் காணப்படுகின்றது.

எனவே, இந்த மாற்றுவழிப் பாதையூடாக பயணம் செய்யும் பொதுமக்களும் வாகன சாரதிகளும் அவதானத்துடன் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(உ-101)

## மக்கள் தொடர்பாடல் பிரிவு கிளிநொச்சியில் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் மக்கள் தொடர்பாடல் பிரிவு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவை கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ் அதிகாரி என்.டி நீல்களுவத்த திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட மக்கள் தொடர்பாடல் அதிகாரி என்.எல்.அரித்தீன், கிளிநொச்சி மாவட்ட மக்கள் தொடர்பு பதில் பொலிஸ் அதிகாரி சாந்த பூநகரி, பொலிஸ் அத்தியட்சகர் செல்வம், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி சாலிய சில்வா, கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செனதீர உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (உ,கே)

## கோடா வைத்திருந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் ஒரு போத்தல் கோடாவை தன்வசம் வைத்திருந்த நபருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபரைக் கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிபதி எஸ்.விஜயராணி குறித்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்திரவிட்டதுடன், குறித்த நபர் ஏற்கனவே நீதிமன்றத்தினால் குற்றமிழைக்கப்பட்டு தண்டிக்கப்பட்டமையால் அவரை மேலும் ஒரு மாத கட்டாய சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (உ-கே)

# கர்ப்பிணிகள் நாளாந்த உணவில் மூலிகைகளை சேர்க்க வேண்டும்

## ஆயுர்வேத பாதுகாப்பு சபைத் தலைவர்

(வேலணை)

உள்ளூரில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய மூலிகைகளை இனங் கண்டு அவற்றை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் சிறந்த உடல் ஆரோக்கியத்தினைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிரதேச சபையின் ஆயுர்வேத பாதுகாப்புச் சபை தலைவர் வைத்திய கலாநிதி பிறிட்டோ டக்கிளஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். பாசையூர் மகப்பேற்று நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற கர்ப்பிணித் தாய் மார்களுக்கான இலைக் கஞ்சி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தாய்மார்கள் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் கர்ப்ப காலங்களில் போஷாக்கான உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும்.

குறிப்பாக மூலிகைகளை இனங் கண்டு அவற்றினை நாளாந்தம் உணவில் இணைத்துக் கொள்வதன் மூலம் நல்ல போஷாக்கான உணவினை பெற்றுக்கொள்ள முடியும். இதனைக் கர்ப்பிணித் தாய்மார்கள் உட்கொண்டு வந்தால் அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளும் நல்ல ஆரோக்கியத்துடன் பிறக்கும்.

இதன் அறிமுகமாகவே இந்த இலைக கஞ்சி வழங்கப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி மரியதாசன் உள்ளிட்ட பல அதிகாரிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ-05)

## சிரமத்துக்குள்ளாகும் வாகனச் சாரதிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியை இணைக்கும் ஒரு வழிப்பாதையாக உள்ள கே.கே. எஸ். வீதியோரமாக நீண்ட காலமாகக் காணப்படும் குழியினால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனச் சாரதிகள் மற்றும் பொதுமக்கள் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, தெல்லிப்பளை மற்றும் அளவெட்டியில் இருந்து நகருக்குள் பிரவேசிக்கும் வாகனச் சாரதிகளே இவ்வாறு சிரமத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில சர்ந்தர்ப்பங்களில் இவ்வீதியால் வரும் வாகனங்கள் சறுக்கி வீதியை விட்டு விலகியுள்ளதாகவும், இதனால் வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து அவற்றைச் சீர்செய்யுமாறு சாரதிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (எப்.எஸ்)

## செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலைகளில் கர்நாடக சங்கீதம் மற்றும் விஞ்ஞானம் (இலத்திரனியல்) ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். புலோலி மெ.மி.த.க. பாடசாலை ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகளுக்கு கர்நாடக சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தரம் 10, 11 வரையான வகுப்புக்களுக்கு விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமே இச்செயலமர்வு நடைபெறவுள்ளது.

குறித்த பாட ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ-109)

## நெடுந்தீவு பேருந்து சேவையை சீர்செய்யுமாறு மக்கள் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுக்கான இலங்கை போக்குவரத்து பேருந்து சேவையின் காலைச் சேவைகள் தற்போது இடம்பெறுவதில்லை எனவும், இதனால் தாம் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்துக்கென காலை 7 மணிக்கான சேவையில் பேருந்து குறிகட்டுவானில் இரவு நின்று காலையில் நெடுந்தீவுக்கான சேவை இடம்பெறுகிறது. இச சேவை இல்லையென்றால், யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்கு வந்து அப்பேருந்து சேவையில் ஈடுபடுவது வழக்கமாகும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இவ்விரு சேவைகளும் இடம்பெறாததால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், நோயாளர்கள் எனப் பலர் சிரமங்களுக்குள்ளாவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக சம் பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து முன்னர் இடம் பெற்றது போல் காலைச் சேவையை மீண்டும் மேற்கொள்ள ஆவண செய்யுமாறு இப்பிரதேச பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (65)

## மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் சமாதான நீதவானாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

இல. 247 நல்லூர் மத்தியஸ்தர் குழாமின் தவிசாளராகப் பதவி வகிக்கும் நாகலிங்கம் நித்தியானந்தன் பதவி வகிக்கும் முழுக்காலத்துக்கும் தீவு முழுவதுக்குமான சமாதான நிதவானாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் மத்தியஸ்தர் குழுவில் உறுப்பினர்களாகப் பதவி வகிக்கும் ஏனைய 16 பேரும் அவர்கள் பதவி வகிக்கும் காலத்துள் யாழ்ப்பாணம் நீதி நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதவான்களாக நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களது பெயர் விபரம் வருமாறு: கனகசபை தர்மநாயகம், மனுவெல் வித்தியானந்த நேசன், சந்திரசேகரம் ஜெயபாலச்சந்திரன், சின்னப்பிள்ளை தியாகராசா, செல்லையா இராமநாதன், பொன்னுத்துரை ஜெயானந்தன், திருமதி புஸ்பவதி மன்மதராஜசிங்கம், திருமதி கமலாவதி பாலசுப்பிரமணியம், ஜெகதீஷன் முத்துக்குமாரசுவாமி, கந்தையா இராஜநாயகம், இராமலிங்கம் சத்தியேந்திரா, சங்கரப்பிள்ளை செல்லைப்பா, செல்வராசா, தம்பியப்பா பாலதயானந்தன், செல்லையா குகதாஸன், வரதராஜன் ஆறுமுகன்.

## முக்கிய கலந்துரையாடல்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள சனசமூக நிலையங்களுக்கான உள்ளூர் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தொடர்பான பயிற்சி நெறிக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சனசமூக நிலைய அங்கத்தவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச சபை தவிசாளர் அறிவித்துள்ளார். (உ-18)

## கொக்கிளாயில் அமைக்கப்படும் சுனாமி எச்சரிக்கைக் கோபுரம்

(கொக்கிளாய்)

சுனாமி எச்சரிக்கைக் கோபுரம் கொக்கிளாய் அ.த.க. பாடசாலை வளவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் கடற்கரைப் பகுதியில் வாழ்கின்ற மக்களின் நலன் கருதி இச்சுனாமி எச்சரிக்கைக் கோபுரம் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி எச்சரிக்கைக் கோபுரத்தின் முதற்கட்ட வேலையாக அதன் அடிப்பகுதி அமைக்கப்பட்டு இரண்டாம் கட்ட வேலையாக கோபுரம் அமைக்கும் பணியும் நிறைவடைந்துள்ளது.

இதன் அடுத்த கட்டப் பணியாக எச்சரிக்கை ஒலி எழுப்பும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது.

இந்த எச்சரிக்கை மையம் அமைவதற்கான இடத்தை கொக்கிளாய் அ.த.க. பாடசாலை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

## காரைநகர் கடற்படையினரின் நடமாடும் மருத்துவ முகாம்

(யாழ். நிருபர்)

காரைநகர் கடற்படையினரின் 56ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடமாடும் மருத்துவ முகாம் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

அனலைதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை போன்ற தீவுப் பகுதிகளிலிருந்தும் பொன்னாலை, மூளாய், சுழிபுரம் போன்ற அயற்கிராமங்களில் இருந்தும் 1200 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

யாழ். போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணர்களும் கடற்படையினரின் வைத்தியர்களும் இணைந்து மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இம்மருத்துவ முகாமில் வட பிராந்திய கடற்படைக் கட்டளைத் தளபதி றியல் அட்மிரல் விஜயகுணவர்த்தன, காரைநகர் கடற்படைத் தளபதி ஆர்.சி.யு. சில்வா ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மூக்குக் கண்ணாடிகள், அங்கவீனர்களுக்கான முச்சக்கர நாற்காலிகள் மற்றும் கைத்தடிகள் என்பவற்றை வழங்கினர்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பணப் பரிசில்களும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இம்மருத்துவ முகாமுக்கு வருகை தந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மற்றும் குழந்தைகள், சிறுவர்களுக்கும் சத்துணவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (10)





கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற அரச ஓய்வூதியர் தினமும் சிரேஸ்ட ஓய்வூதியர் கௌரவிப்பு நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் சிரேஸ்ட ஓய்வூதியருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், கலந்து கொண்ட ஓய்வூதியர்களையும் காணலாம். (112)

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் சிறுவர்உரிமைகளை மேம்படுத்தும் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள், இலங்கைப்பிரஜையாகவும், நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமைகளாக, பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூகவியல் உளவியல் குற்றவியல் அல்லது குற்றவியல் தொடர்பான விசேட பட்டம் அல்லது சமூக வியல் பட்டம் உள்ளடங்கலாக சாதாரணபட்டத்தைப் பெற்றிருத்தல்வேண்டும்.


18வயதுக்குக் குறையாதவர்களும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஆணையா ளர்நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், இல 150ஏ நாவலர்வீதி நுகேகொடை என்னும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சிறுவர்களை மேம்படுத் தும் உதவியாளர்பதவிக்கான விண்ணப்பம் 2011எனக்குறிப்பிட்டு அனுப்பவேண்டும். மேலும், விபரங்களையும் மாதிரி விண்ணப்பப் படிவத்தையும், தினமுரசு அலுவலகத்தில் பார்வையிடலாம்.




கரவெட்டி பிரதேச செயலக கலை இலக்கிய போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர், சிறுகதைப் போட்டியில் 3ஆம் இடத்தினைப் பெற்ற சிவசுப்பிரமணியம் ஜெயசங்கருக்கு சான்றிதழ் வழங்குவதை காணலாம். (116)

# எமது பாரம்பரிய கலைகளுக்கு புத்துயிர் அளிக்கப்படவேண்டும்

## - வடமாகாண கல்விப்பணிப்பாளர்



(யாழ் நிருபர்)

தமிழ் மக்களின் பாரம் பரியக் கலை வடிவங்கள் மாணவர்களின் ஊடாக வெளிக்கொண்டு வரப்படவேண்டும், கிராமிய மட்டத்தில், பாரம் பரியக் கலைகளுக்குப் புத்துயிரளித்து மாணவர்களின் ஊடாக வெளிக் கொண்டு வருவதன் மூலம் எமது கலை வடிவங்கள் பேணிப் பாது காக்கப்படுவதோடு மாணவா களின் ஆற்றல்களையும் மேம் படுத்த முடியும் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

வடமாகாணக்கல்வித்திணைக் களத்தின் ஏற்பாட்டில் துணுக் காய் கல்வி வலயத்தினரால் நடத தப்பட்ட பௌர்ணமிக் கலை விழாவுக்கு தலைமைவகித்து உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் கலையரங்கில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில் எமது கலைவடிவங்கள் மழுங்கடிக்கப்படாமல் எதிர் காலச் சந்ததியினருக்குச் சிறந்த முறையில் கையளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே வடமாகாணக்கல்வித்திணைக்களம் ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் இத்தகைய பௌர்ணமிக்கலை விழாக்களை நடத்தி வருகிறது.

எதிர்காலத்தில் பாடசாலை மட்டத்தில் பௌர்ணமிக்கலை விழாக்கள் நடத்தப்படவேண்டும். எல்லா மாணவர்களும் தமது கலை வடிவங்களை ஆற்றுகை செய்வதற்கு ஆசிரியர்கள் அவர்களை வழிப்படுத்த வேண்டும். எனவும் அவர் குறிப்பிட்டார்.

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. (10)

# பலருக்கும் பயன்தரும் மணிக்கூடு உரிய நேரத்தை காட்டுமா?

(குருநகர்)

யாழ். நகர மையப் பகுதியில் ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையாக வர்த்தக நிறுவனமொன்று நிறுவிய மணிக்கூட்டுச் சிகரத்து மணிக்கூடும் ஓடாமல் சில வாரங்களாகக் காணப்படுகிறது.

இதற்கு முன்பாக யாழ்.நகர் மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடு ஓடாமல் நின்று பல மாதங்களாகின்றன.

இவ்வருட முற்பகுதியில் வர்த்தக நிறுவனம் நிறுவிய சிகர மணிக்கூடு கடந்த சில, மாதங்களாக ஒழுங்காக நேரங்களைக் காட்டி வந்தன.

இப்பொழுது பொது இடங்களில் பயணத்தை மேற்கொள்கின்ற மக்கள் நேரத்தை அறிந்து கொள்ளும் மார்க்கம் இல்லாமல் போயுள்ளது குறிப்பிடத்தக்கது. (68)

# ஆக்கங்கள் கோரல்

(வடமராட்சி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் “சக்கரம்” எனும் ஆன்மீக சஞ்சிகை இதழ் 11க்கு ஆக்கங்கள் வரவேற கப்படுகின்றது. இதற்கு கலை இலக்கிய ஆன்மீக சம்பந்தமான கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகிறது ஆக்கங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் “சக்கரம் பெரியாழவார் ஆச்சிரமம், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் துன்னாலை வடக்கு புலோலி எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஆச்சிரம பீடாதிபதி வை.ஆனந்தராஜா அறிவித்துள்ளார். (116)

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(16.10.2011 –ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

புரட்டாதி 29 ஆம் நாள்.

இராகுகாலம் 4.32–6.02, சுபநேரம் 9.02 –10.32,

நட்சத்திரம்: ரோகினி பி.இ.4.42 வரை

திதி: சதுர்த்தி பி.ப. 3.04 வரை

கரிநாள்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணம்வரும், குடும்பத்தில் சந்தோஷம், உல்லாசப்பயணம் கல்விப் பாராட்டு, நினைத்ததைச் சாதித்தல்

**ரிஷபம:**– சகோதரவெறுப்பு, பணக் கஷ்டம், காரியத்த[illegible], அவசர முடிவு, மனக்கவலை, தேகசுகம், பாதிப்பு.

**மிதுனம் :**–பணம் வரும், தேக ஆரோக்கியம், அதிகாரப் போட்டி எதிரியை வெற்றிகொள்ளல், வசதிக்குறைவு.

**கடகம்:**– குடும்பத்தில் கஷ்டம், பணக்கஷ்டம், அவசர முடிவு, நண்பர் தொல்லை, அயலார் எதிர்ப்பு.

**சிம்மம்:**– பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், உடல் உபாதை, வீண் கோபம், நண்பர் தொல்லை.

**கன்னி :**– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேக நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு, சுற்றத்தார் ஆதரவு.

**துலாம் :**–பணம் வரும், குடும்பத்தில் கவலை, வீண் கோபம், மேலதிகாரி சினம், நண்பர் தொல்லை.

**விருச்சிகம்:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், தேக ஆரோக்கியம், சுற்றத்தார் ஆதரவு, மனமகிழ்ச்சி.

**தனுசு:**– பணக்கஷ்டம், அதிகாரிகள் சினம், தொழில் முடக்கம், சுபகாரியப் பேச்சு, சங்கடமான நிலை.

**மகரம:**– குடும்பத்தில் தொல்லை, பணம் வரும் சகோதர வெறுப்பு, நினைத்ததைச் சாதித்தல், தேக சுகம் பாதிப்பு.

**கும்பம் :**– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, அயலார் பகை, நண்பர் தொல்லை, அதிகாரப் போட்டி.

**மீனம் :**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், வசதிக்குறைவு, உறவினர் ஆதரவு, நினைத்ததைச் சாதித்தல்.

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு துரிதகதியில் வீடுகள்

(கொக்கிளாய்)

கொக்கிளாய் பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைக்கும் பணி விரைவு படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பணிமனை மற்றும் பொருளாதார அமைச்சின் ஊடாக எடுக்கப்பட்டுள்ள இப்பணிகள் விரைவு படுத்தப்பட்டுள்ளன.

நிரந்தர வீடுகளை பெறத் தகுதியானவர்களுக்கு தேவையான கல் ,சீமெந்து, கொங்கிறீற் கற்கள் என்பன பறிக்கப்பட்டு வருகின்றன. கட்டட வேலைகளுக்கான பொருட்கள் பறிக்கப்பட்டு நிறைவடைந்து பின்னர் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. (17)

# பாராட்டு விழா

(யாழ்.நிருபர்)

கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்ற செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனுக்கு இணுவில் அறநெறிப்பாடசாலைச் சமூகமும் பொதுமக்களும் இணைந்து நடத்தும் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இணுவில் அறிவாலயத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடத்தலைவர் பேராசிரியர் க.தேவராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இணுவில் சைவத்திருநெறிக் கழக காப்பாளர் பெ.கனகசபாபதி தொடக்கவுரை நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோர் வாழ்த்துரையும் ம.பா.மகாலிங்கசிவம் க.சிவாஜி, கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோர் சிறப்புரையும் வழங்குவர். (10)

# வணிகப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வணிகப்போட்டியில் குறுவினாப் போட்டி முடிவுகள் வலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் போட்டியில் முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

தரம் - 10

கே. பிரசாந் (ஹாட்லிக் கல்லூரி), வி.விஜிதா (வட இந்து மகளிர் கல்லூரி), என்.மனோஜ் ஹாட்லிக் கல்லூரி), கே. கீர்த்தனா ( வடஇந்து மகளிர் கல்லூரி), கே. கிருஷானந் (நெல்லியடி மத்திய மகாவித்தி)

தரம் - 11

ரி. சன்சிகா (வல்வெட்டி ஏக்.ரி.எம்.எஸ்), எஸ். நதுர்ஜா (வட மத்திய மகளிர் கல்லூரி), எஸ். அபிநயா (மெதடிஸ்த மகளிர் உயர்தரப்பாடசாலை). கே.சரண்யா (ஞானசாரியார் கல்லூரி), வை. ஸ்ரீநங்கை (தேவரையாளி இந்துக் கல்லூரி),

தரம் - 13

எஸ். சுதன் (விக்னேஸ்வராக் கல்லூரி), கே.நிரோஜன் நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரி), எஸ். அகிலன் (நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரி), எஸ். பரதன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ். சுகன்யா விக்னேஸ்வராக்கல்லூரி.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-109)



சுகாதார வாரத்தை முன்னிட்டு அண்மையில் ஜெயபுரம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணியில் அப்பகுதி பொதுமக்களும் ஈடுபடுவதை காணலாம். (112)

## நவோதயா பாடசாலைகள் விளையாட்டு

# இறுதி ஆட்டங்கள் இன்று



(யாழ்ப்பாணம்)

வடமாகாண நவோதயா பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தின் 23 நவோதயா பாடசாலைகள் பங்குபற்றும் விளையாட்டுப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்று வருகின்றது.

ஆண், பெண்களுக்கான கரபபந்தாட்டம், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம், ஆண்களுக்கான கிரிக்கெட் மற்றும் அஞ்சலோட்டம் போன்ற விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது.

இதன்படி அனைத்து விளையாட்டுப் போட்டிகளுக்குமான இறுதிப்போட்டியும் மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டியும் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், வட்டு இந்துக் கல்லூரி அணியும் தகுதி பெற்றுள்ளன.

மூன்றாமிடத்திற்கான போட்டிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய அணியும், ஸ்ரான்லிக் கல்லூரி அணியும் தகுதி பெற்றுள்ளது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்திற்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் தகுதி பெற்றுள்ளது.

மூன்றாமிடத்திற்கான போடடிக்கு வசாவிளான் மகா வித்தியாலய அணியும், சிறி சுமனா மகாவித்தியாலய அணியும் தகுதி பெற்றுள்ளது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் இறுதி ஆட்டத்திற்கு நானாட்டான் மகா வித்தியாலய அணியும், வவுனியா இந்துக் கல்லூரியும் தெரிவாகியுள்ளன. இதில் மூன்றாமிடத்திற்கான போட்டிக்கு ஸ்ரான்லிக் கல்லூரியும், மீசாலை வீரசிங்கம் ம.வியும் தகுதி பெற்றுள்ளன. (12)

# கறுப்புப் பட்டி வீரர்களுக்கான பரீட்சை



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கறுப்புப் பட்டி கராத்தே வீரர்களுக்கான பரீட்சை (கிறேடிங்) நேற்று யாழ். ஓ.எல்.ஆர். மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

வடமாகாண கராத்தே சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை கராத்தே சம்மேளனத்தின் செயலாளர் கொன்சன் பெரேரா, இலங்கை கராத்தே சம்மேளனத்தின் தொழில் நுட்ப அதிகாரி சிறிகுமார ஆகியோர் கலந்து கொண்டனர்.

இருபது கறுப்புப் பட்டி கராத்தே வீரர்களுக்கிடையில் நடைபெற்ற இப்பரீட்சையில், அனைத்து வீரர்களும் சித்தியடைந்துள்ளதாக வடமாகாண கராத்தே சங்கத் தலைவர் றேமன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள வடமாகாண கராத்தே வீர, வீராங்கனைகளுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய கராத்தே வீர, வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர்.

தனிக்காட்டா, குழுக்காட்டா, சண்டை போன்ற போட்டிகளும் இடம்பெறவுள்ளதாகவும், இதில் கலந்துகொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளை காலை 9.30 மணிக்கு முன்னர் ஓ.எல்.ஆர். மகா வித்தியாலயத்திற்கு சமூகமளிக்குமாறும் கேட்டுள்ளார். (20)

# சண்டிலிப்பாய் கோட்ட கால்பந்து சம்பியன்கள்




(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்றது.

வயது அடிப்படையில் இடம்பெற்ற இப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி யும், மாதகல் சென் ஜோசப் அணியும் மோதின. இதில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. இதில் மூன்றாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பே ாட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் ஹொன்றியரசர் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. இதில் மூன்றாமிடத்தை மாதகல் சென் ஜோசப் வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், ஹென்றியரசர் கல்லூரியும் மோதின. போட்டி நிறைவடையும் வரை இரு அணிகளும் கோல் எதனையும் போடாதமையால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் 3-2 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனானது. மூன்றாமிடத்தினை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் வலய மட்டப் போட்டியில் பங்கு பற்றும் தகுதியைப் பெற்றுள்ளதாகவும், விரைவில் வலய மட்டப் போட்டிகள் இடம் பெறும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

# நட்பு ரீதியான கால்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான நட்புறவு கால்பந்துப் போட்டி ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 14, 16, 18, 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இப்போட்டி நடைபெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல் எதனையும் போடாமையால் சமநிலையில் நிறைவடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (93)

# இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த இறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியும், மட்டுவில் வளர்மதி அணியும் மோதவுள்ளன. இரு அணிகளும் யாழ். மாவட்டத்தில் முன்னிலையிலுள்ள அணி என்பதால் இப்போட்டி பெரும் பரபரப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



சென் ஜோன்ஸ் கல்லூரியின் கால்பந்து வீரர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் கடந்த 12, 13ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் கால்பந்து நுட்பம் தொடர்பான பல விளக்கங்கள் வீரர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டது.

# மாவட்ட மட்ட கூடைப்பந்து சென்றலைஸ் புளூஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்ட தொடரின் போட்டி ஒன்றில் சென்றலைஸ் புளூஸ் அணி வெற்றிபெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழகம் 301 ஏ அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான போட்டித் தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் கோப்பாய் ஐக்கியம் 'ஏ' அணியும், சென்றலைஸ் புளூஸ் அணியும் மோதின. சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய சென்றலைஸ் புளூஸ் அணி 62-31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (93)

# சென்ஜோன்ஸ் கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணிக்கெதிரான கால்பந்துப் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. இரு அணிகளுக்கிடையிலான நட்புறவுக் கால்பந்துப் போட்டி நேற்று முன்தினம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

வயது அடிப்படையில் இடம்பெற்ற இப்போட்டிகளில் மூன்று பிரிவுகளில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் 1-1 என்ற கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியிலும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதியாக நடைபெற்ற 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் கடுமையாக விளையாடிய போதும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இறுதி நேரத்தில் ஒரு கோலைப்போட்டு 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (93)

# அரையிறுதியில் ஸ்பெயின் வீரர்




(ஷாங்காய்)

ஷாங்காய் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் அரையிறுதிக்கு ஸ்பெயின் வீரர் டேவிட் பெரர் முன்னேறியுள்ளார்.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதியில் அமெரிக்காவின் ஆண்டி ரோடிக்கை, பெரர் எதிர்கொண்டார். டைபிரேக்கர் வரை சென்று முதல் செட்டை பெரர் இழந்தார். எனினும் அடுத்த இரு செட்களிலும் உத்வேகத்துடன் விளையாடிய பெரர் 6-7(5-7), 6-2, 7-6(7-2) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இதேவேளை, ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு காலிறுதியில், இந்தியாவின் மகேஷ் பூபதி, லியாண்டர் பயஸ் ஜோடி, பிரேசிலின் தாமஸ், குரோஷியாவின் இவான் ஜோடியை சந்தித்தது. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பயஸ், பூபதி ஜோடி 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

# சிம்பாப்வே தொடரிலிருந்து நீக்கப்பட்டார் ரிம் சௌத்தி



(ஹமில்டன்)

சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இருந்து உபாதை காரணமாக நியூசிலாந்து அணியின் வேகப் பந்துவீச்சாளர் ரிம் சௌதி நீக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற சம்பியன் லீக் ருவென்ரி 20 போட்டிகளுக்கான தயார்படுத்தல்களை மேற்கொண்டிருந்த போது அவர் உபாதைக்குள்ளாகியிருந்தார்.

சிம்பாப்வே அணிக்கெதிரான ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் மற்றும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர்களில் இருந்து ஏற்கனவே சௌதி நீக்கப்பட்டிருந்தார்.

எனினும் புலவாயோவில் நடைபெறவிருந்த டெஸ்ட் போட்டிக்கான நியூசிலாந்து குழாமில் அவர் பெயரிடப்பட்டிருந்த நிலையில், உபாதையில் இருந்து மீளாத நிலையில் டெஸ்ட் தொடரில் இருந்தும் அவர் விலக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏப்ரலில் 5ஆவது ஐ.பி.எல்.

(ஹைதாரபாத்)

ஐந்தாவது ஐ.பி.எல்., தொடர் அடுத்த ஆண்டு (ஏப்ரல் 4ஆம் திகதி முதல் மே. 27திகதி வரை) நடைபெறும் என்றும் இதன் தொடக்க விழா சென்னையில் நடைபெறும் என்றும் ஐ.பி.எல். அமைப்பினால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. ஹைதராபாத்தில் ஐ.பி.எல்., நிர்வாக சபை கூட்டம், அதன் தலைவர் ராஜிவ் சுக்லா தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது. பாகிஸ்தான் வீரர்களை ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இணைத்துக்கொள்வது குறித்து இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படவில்லை என்றும் இது குறித்து தீர்மானம் அடுத்த கட்ட கூட்டங்களில் தீர்மானிக்கப்படும் என ஐ.பி.எல். தலைவர் ராஜிவ் சுக்லா தெரிவித்தார்.

# டங்கன் நல்ல முடிவைத் தருவார் காத்திருங்கள் என்கிறார் ராவிட்




(புதுடில்லி)

இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளச்சர் செயற்பாடுகள் குறித்து இப்போதே கணிப்பது சரியாகாது. அவர் அணிக்கு நல்ல முடிவை தேடிக் கொடுக்க அதிக நேரமும், இடமும் அளிக்க வேண்டும் என ராகுல் ராவிட் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கு பிளட்சர் பயிற்சியாளராக இருந்த கால கட்டத்தில் அந்த அணி செய்த சாதனைகளை பார்க்க வேண்டும். அவர் நிறைய அனுபவங்களுடன் இந்திய அணிக்கு பயிற்சியாளராக வந்து இருக்கிறார். அவரிடம் கிரிக்கெட் குறித்த நிறைய அறிவு உள்ளது. அவரது செயற்பாடுகள் குறித்து இப்போதே கணிப்பது சரியாகாது. அவர் அணிக்கு நல்ல முடிவை தேடிக் கொடுக்க அதிக நேரமும், இடமும் அளிக்க வேண்டும். தற்போது இங்கிலாந்து அணி நல்ல நிலையில் உள்ளது. அவர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள். அவர்கள் இங்கிலாந்து மண்ணில் நடந்த தொடரில் சிறந்த திறமையை காட்டினார்கள். எல்லாத் துறைகளிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் நாம் போதிய அளவு நன்றாக விளையாடவில்லை. நிறைய போட்டிகளில் தொடர்ந்து விளையாடுகையில் சோர்வு ஏற்படுவது இயற்கை தான். பல வீரர்கள் காயம் அடைந்து இருப்பதால் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடருக்கான இந்திய அணியில் இளம் வீரர்கள் அதிகம் இடம் பிடித்துள்ளனர். இந்திய அணி இந்த தொடரில் சிறப்பாக செயற்படும் என்று நம்புகிறேன். ஆனால் அது இந்திய அணிக்கு எளிதான காரியம் அல்ல. ஏனெனில் இங்கிலாந்து அணி தற்போது வலுவான நிலையில் உள்ளது. அவர்கள் நன்றாக தயாராக வந்து இருக்கின்றனர். இதனால் இந்த போட்டி தொடர் சவாலாக இருக்கும். இளம் வேகப்பந்து வீச்சாளருக்கு இந்த தொடரில் நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அவர்கள் இந்த வாய்ப்பை எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதை பார்க்க ஆவலாக இருக்கிறது.

# தடைக்குள்ளானார் ரூனி



(லண்டன்)

யூரோ கிண்ண (2012) கால்பந்து தொடரின், மூன்று லீக் போட்டிகளில் விளையாட, இங்கிலாந்து வீரர் ரூனிக்குத் தடை விதிக்கப்பட்டது.

வரும் 2012இல் நடக்கவுள்ள யூரோ கிண்ணக் கால்பந்துத் தொடருக்கான தகுதி சுற்று போட்டியில் இங்கிலாந்து அணி, மான்டினிகிரோ அணிக்கு எதிராக சமநிலை செய்தது. இந்த போட்டியில் பவுல் செய்த, இங்கிலாந்து நட்சத்திர வீரர் ரூனிக்கு, சிவப்பு அட்டை காட்டப்பட்டது.

இதையடுத்து வரும் யூரோ கோப்பை தொடரில், இங்கிலாந்து அணி பங்கேற்கும் மூன்று லீக் போட்டிகளிலும், ரூனே விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இது இங்கிலாந்து ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட ரூனி: தடை மிகுந்த வேதனை தருகின்றது. இருப்பினும் சட்டம் என்பது அனைவருக்கும் ஒன்றுதான். எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற தவறு நடக்காத வகையில் என்னை மாற்றிக்கொள்வேன் எனத் தெரிவித்தார்.

# சூதாட்டத்தில் ஈடுபடும் தேவை அவுஸ்ரேலியர்களுக்கு இல்லை

(மெல்போர்ன்)

சூதாட்டம் குறித்த அதிக விழிப்புணர்வு எமது வீரர்களிடம் இருப்பதால், அதில் ஈடுபடக்கூடிய தேவையோ, சூழ்நிலையோ வீரர்களுக்கு இருக்காது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். அவுஸ்ரேலியா கிரிக்கெட் வளர்ச்சியை சகித்துக்கொள்ளாதோரின் சதியாகவே பார்க்கின்றேன். இவ்வாறு அவுஸ்ரேலிய அணி கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர்கள் யாருக்கும் கிரிக்கெட் சூதாட்டத்தில் தொடர்பு இல்லை என்று அந்த அணியின் கப்டன் கிளார்க் தெரிவித்துள்ளார்.

ஏனைய நாட்டு வீரர்கள் இந்த விடயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது தெரியாது. ஆனால் அவுஸ்ரேலிய வீரர்களுக்கு இதில் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை உறுதியாகத் தெரிவிக்க முடியும்.

சூதாட்ட தரகர்கள் எங்கள் வீரர்கள் சிலரை தொடர்பு கொண்டபோது, அணி மேலாளருக்கும், சர்வதேச கிரிக்கெட்



சபைக்கும் அது தொடர்பாக உடனடியாகத் தகவலை அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இந்நிலையில் மஜத்தின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. அவுஸ்ரேலியா கிரிக்கெட் வளர்ச்சியை சகித்துக்கொள்ளாதோரின் ஒரு சதியாகவே இதை நாம் பார்க்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# முதலிடத்திற்கு ஆபத்தில்லை

சேர்பிய ரென்னிஸ் வீரர் ஜோகோவிச் இந்த ஆண்டு வரை தரப்படுத்தலில் முதலிடத்தில் இருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூலை மாதம் விம்பிள்டன் பட்டத்தை வென்றதும் தரவரிசையில் ரபெல் நடாலை (ஸ்பெயின்) பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலிடத்தை ஜோகோவிச் இடத்தை பிடித்தார். தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறார்.

இந்த நிலையில் சீனாவில் நடந்து வரும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் நடால் 3ஆவது சுற்றில், புளோரியன் மேயரிடம் அதிர்ச்சி தோல்வியடைந்ததன் மூலம் இந்த ஆண்டு இறுதிவரை ஜோகோவிச்சின் முதலிடத்திற்கு ஆபத்தில்லை என்று சர்வதேச ரென்னிஸ் சங்கம் அறிவித்துள்ளது.

நடால் அல்லது பெடரர் அல்லாத ஒரு வீரர் ஆண்டின் இறுதியில் முதல் இடத்தை தக்க வைத்திருப்பது 2003ஆம் ஆண்டுக்கு பின்னர் இதுவே முதல் முறையாகும்.

# தோல்விக்கு முற்றுப்புள்ளி மகிழ்ச்சி என்கிறார் டோனி



(ஹைதாரபாத்)

இங்கிலாந்து அணிக்கெதிரான இந்த வெற்றி மிகவும் முக்கியமானதாகும். தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்த வெற்றி அமைந்தது. இதற்காக வீரர்களை பாராட்டுகிறேன் என்று இந்திய அணி கப்டன் டோனி தெரிவித்தார்.

அனைத்து வீரர்களும் சிறப்பாக விளையாடினார்கள். துடுப்பாட்டத்தில் நாங்கள் நன்றாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தோம். பந்து வீச்சாளர்கள் ஆடுகளத்துக்கு தகுந்தவாறு சிறப்பாக பந்துவீசி தங்களது திறமையை நிரூபித்தார்கள். இங்கிலாந்துக்கு எதிரான இந்த தொடர் பழிவாங்கும் தொடர் இல்லை. பழி வாங்குவது என்பது மிகவும் கடினமான வார்த்தை. இளம் வீரர்கள் இந்த தொடரைச் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

2ஆவது துடுப்பாட்டம் செய்யும் போது துடுப்பாட்ட வீரர்களுக்குச் சிரமம் இருக்கும் என்று நினைத்தேன். இதனால் 250 முதல் 260 ஓட்டங்கள் நல்ல எண்ணிக்கை என்று நினைத்தேன். ஆனால் 300 ஓட்டங்கள் குவித்து விட்டோம். திட்ட மிட்டு விளையாடி இந்த வெற்றியை பெற்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான இரண்டா வது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா வருகிறது ஜேர்மனி அணி

ஜேர்மனியின் பிரபல கால்பந்து அணியான பெயரன் மியூனிக் ஜனவரியில் இந்தியாவுக்கு வருகிறது.

இந்திய கால்பந்து அணியுடன் நட்புறவுப் போட்டியில் விளையாடுகிறது. அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

பெயரன் மியூனிக் ஜேர்மனியில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் மிகவும் பிரபலமானது. 111 ஆண்டுகளாக அந்த அணி கழகப் போட்டிகளில் விளையாடி வருகிறது. ஜேர்மனியின் மியூனிக் நகரை மையமாகக் கொண்டு செயற்படுகிறது.

இது தவிர தென்னாப்பிரிக்கா, ஜாம்பியா அணிகளுக்கு எதிராகவும் இந்திய கால்பந்து அணி நட்புறவுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது. இந்தியாவில் கால்பந்து போட்டியை பிரபலமாக்கும் வகையிலும், இந்தியாவில் இருந்து அதிக வீரரகளை உருவாக்கி கால்பந்து அணியை வலுப்படுத்தவும் இந்திய கால்பந்து கூட்டமைப்பு இதுபோன்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

# நீதித்துறை நடவடிக்கைகளை விரைவுபடுத்த புதிய நீதிபதிகள்

## அமைச்சர் ஹக்கீம் தகவல்



(கொழும்பு)

**நாட்டின் நீதித்துறை நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு புதிய நீதிபதிகள் நியமிக்கப்படவுள்ளதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை நிறுவன சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆறாவது சட்ட மாநாடு நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

இந்த மாநாட்டின் பிரதம விருந்தினராக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பங்கேற்றதுடன் சொலிஸ்டர் ஜெனரல் ஜனாதிபதியின் சட்டத்தரணி பாலித பெர்னான்டோ கௌரவ விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்த மாநாட்டில் 200 க்கும் அதிகமானோர் பங்கேற்றிருந்தனர்.

மாவட்ட நீதிமன்றங்களில் சட்ட மத்தியஸ்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்வரும் மாதங்களில் புதிய நீதிபதிகளை நியமிப்பதற்கான நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாக இந்த வைபவத்தில் கலந்துகொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றுவதே ஜனாதிபதியின் இலக்காகையால் நீதிமன்ற கட்டமைப்பில் உள்ள வழக்குகளை விரைவாக தீர்க்க முடியாவிட்டால் ஆசியாவின் அதிசயம் என இலஙகையை நிச்சயமாக குறிப்பிட முடியாது என அவர் இதன்போது குறிப்பிட்டார்.

நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளை நிறைவு செய்வதற்கு இந்த பிராந்தியத்திலுள்ள பல நாடுகள் எட்டு மாதங்கள் முதல் ஒரு வருடத்தை மாத்திரமே எடுத்துக் கொள்கின்றன.

இதுவொரு சிறந்த இலக்காகும் என்றும் அனைவரின் ஒத்துழைப்புடன் இலக்கினை எட்ட முடியும் என தான் எதிர்பார்ப்பதாகவும் நீதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்

## ரணிலின் நடவடிக்கைக்கு கருஜெயசூரிய ஆட்சேபம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேல் மாகாண உறுப்பினர் சிரால் லக்திலக்க, இடைநிறுத்தப்பட்டமையை ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய ஆட்சேபித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமது அதிகாரத்தை பயன்படுத்தி சிரால் லக்திலக்கவின் உறுப் புரிமையை அண்மையில் ரத்துச் செய்தார்.

இந்தநிலையில், குறித்த முடிவு, ஏற்றுககொள்ளக்கூடியதல்ல என்று கரு ஜய சூரிய கடிதம் மூலம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன மற்றும் லக்திலக்க, ஆகியோரின் வெளியேற்றத்தை ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர்களில் ஒருவரான சஜித் பிரேமதாஸ கண்டித்துள்ளார.

## சிறிகோத்தாவில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண மற்றும் மேல் மாகாணசபை உறுப்பினர் சிறிலால் லக்திலக்க ஆகியோரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தம் செய்யப்பட்டமைக்கு எதிராக சிறிகோத்தாவில் அமைந்துள்ள ஐ.தே.க.வின் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

இடைநிறுத்தம் செய்யப்பட்ட இருவரின் ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, கட்சிக்காக உழைத்தவர்கள் பழிவாங்கப்படுவதாகவும், ஐ.தே.க.வை பலவீனப படுத்தும் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் சதியினை முறியடிப்போம் போன்ற சொற்பதங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# முதலாளிவர்க்கமும் அரசாங்கமும் இனவாதத்தை தூண்டுகின்றன

## குற்றஞ்சாட்டுகிறது நாம் இலங்கையர் அமைப்பு

(கொழும்பு)

இடதுசாரி அமைப்புகளை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்ற முதலாளித்துவ வர்க்கமும், அரசாங்கமும் இணைந்து தமது இருப்புக்காக இனவாதத்தைத் தூண்டி வருவதாக நாம் இலங்கையர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நாம் இலங்கையர் அமைப்பு விடுதலைப்புலிகளிடம் பணத்தை பெற்றுள்ளதாக ஊடகங்களில் வெளியாகியுள்ளதாக செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்து வெள்யிட்டுள்ள அறிக்கையிலேயே அந்த அமைப்பு மேற்கண்டவாறு கூறியுள்ளது. பொய்யானது, அவதூறு ஏற்படுத்துவதுமான குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிப்பதாகவும் தமது அமைப்பு தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக செயற்பாட்டு ரீதியான தலையீடுகளை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழக சமூகத்தினால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு என நாம் இலங்கையர் அமைப்பு கூறியுள்ளது.

மக்களின் முழுமையான ஆசியுடனேயே,தமது அமைப்பு சகல செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது என நாம் இலங்கையர் அமைப்பின் ஏற்பாடடாளர் உந்துல் பிரேமரட்ன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாரதி அனுமதிப் பத்திர கோரிக்கை; தேரரின் மனுவை விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான அனுமதிகோரி பிக்கு ஒருவரால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை,விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றை ஆட்சேபித்து, மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்ததை அடுத்து, உயர்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான அனுமதி வழங்குமாறு கோரி பிக்கு ஒருவரால், தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்யுமாறு, மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரின் கோரிக்கையை இதற்கு முன்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஆட்சேபித்து, மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரால், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் தீர்ப்பு நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

குடாவஸ்கமுவ சிறி ஷக்கியாமுனி விஹாரையின் தேரரான கலாநிதி பரகொட விமலவங்ச தேரர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

ஆங்கில ஆசிரியரான தனக்கு அன்னதான புண்ணிய நிகழ்வுகளுக்கும் அழைப்புகள் கிடைத்து வருவதால், அதிக வேலைப்பளு காரணமாக காரொன்றின் தேவை நிலவுவதாக மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

எனினும், சாரதி ஒருவரை அமர்த்துவதற்குப் போதிய வசதிகள் தன்னிடம் இல்லை என்றும் தேரர் மனுவில் கூறியிருந்தார் இந்த விசாரணையின் போது மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அதிகாரிக்கு ஒரு இலட்சம் ரூபா பிணை

(கொழும்பு)

சாட்சியத்தின் ஏற்புடைமை பற்றிய வழக்கொன்றில் பிரதம சாட்சியான பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி), நீதிமன்ற விசாரணையின் போது ஆஜராகத் தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டு ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

செப்டெம்பர் 7 ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு வரத்தவறிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை நீதிபதி சுனில் ராஜபக்ஷ ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

புலிகளுடன் தொடர்பிருந்ததாக சந்தேகிக்கப்பட்ட தியாகராஜா மோகன் ரூபன், பயங்கரவாத புலனாய்வுப் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலம் சுயவிருப்பின் பேரில் வழங்கப்பட்டதா அல்லது நிர்ப்பந்தத்தின்பேரில் வழங்கப்பட்டதா என தீர்மானிப்பதற்கான விசாரணைக்கு வரவில்லை என்பதே மேற்படி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மீதான குற்றச்சாட்டாகும்

இவ்வழக்கு செப்டெம்பர் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேற்படி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றுக்கு வந்திருந்தார். அப்போது அவர் 7ஆம் திகதி விசாரணைக்கு வரத்தவறியமை கவனத்திற்கொள்ளப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். அடுத்த விசாரணை நவம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# மூன்று மாதங்கள் தங்கியிருந்து துமிந்த சிகிச்சை பெறவேண்டும்

## நரம்பியல் நிபுணர் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வா மேலும் மூன்று மாதங்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற வேண்டுமென சிறி ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நரம்பியல் பிரிவு நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார். தற்போது துமிந்த இயற்கையாகவே சுவாசிப்பதாகவும் தெரிவித்துள்ள அவர் துமிந்தவுக்கு இன்னும் சுயநினைவு ஏற்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

அவரது மூளை இயக்க நிலை குறித்து அறிந்து கொள்வதற்காக சீ. ரி ஸ்கான்கள் பலமுறை எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.இதேவேளை, சிறி ஜயவர்தனபுர வைத்தியசாலையின் தீவிர கண்காணிப்புப் பிரிவுக்கு வருவோர் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் வைத்தியசாலையின் நுழைவாயிலில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# கொழும்பில் அதிகார சபைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டால் தடுத்து நிறுத்துவோம்

## மாநகர மேயர் முஸம்மில் தெரிவிப்பு



(கொழும்பு)


கொழும்பு மாநகர சபையை விசேட அதிகார சபையாக மாற்றுவதென்பது தற்போது அரசியல் கலந்துரையாடலுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதாக கொழும்பு மாநகர மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

இதை எவ்வாறு, எப்போது செய்வது என்பது குறித்து யாரும் யோசனை களை முன்வைக்கவில்லை. உறுதியாக திட்டங்கள் முன்வைக்கப்படும்போது அதை நாம் எதிர்த்து நிறுத்துவோம் என அவர் தெரிவித்தார்

நகரின் அபிவிருத்திக்கு என்னிடம் திட்டங்கள் உள்ளன. ஆனால், தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்னர் அரசாங்கத்தினால் வரையப்பட்ட திட்டங்களையும் நான் கருத்திற்கொள்ள வேண்டும்.

விஹாரமதேவி பூங்காவை நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்ப தில் சட்டப் பிரச்சினைகள் இருக்கும். 2001 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முனனணி அரசாங்கம் இதைச் செய்ய முயன்றபோது நீதிமன்றம் அந்நடவடிக்கையை நிராகரித்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

# அதிவேகப் பாதை அடுத்த மாதம் திறப்பு



(கொழும்பு)

தென் பிராந்திய அதிவேக பாதை எதிர் வரும் நாவம்பர் மாதம் 19 ஆம் திகதி .உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. அதிவேகப்பாதை நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

126 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டுள்ள பாதை திறக்கப்பட்டவுடன் கொழும்பில் இருந்து காலிக்கும் ஒரு மணி 30 நிமிட நேரத்தில் சென்றடைய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடுகதிப் பாதையுடன் வேறு 8 பாதைகளும் இணைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# வியட்நாம் தூதரகம் திறப்பு

இலங்கைக்கான வியட்நாம் தூதுவராலயம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள வியட்னாம் ஜனாதிபதி ட்ரொன்க் டென் சென்க் மற்றும் பிரதமர் டி.எம்.ஜயரட்ன ஆகியோரின் பங்களிப்புடன் இடம்பெற்றது. கொழும்பு வோட் பிளேசில் வியட்நாம் தூதுவராலயம் முதன்முறையாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் டி.எம்.ஜயரட்ன, தூதுவராலயத்தை ஸ்தாபித்ததன் ஊடாக இரு நாடுகளிடையே சிறந்த உறவுமுறை தொடர்ந்தும் பேணப்படும் எனக் குறிப்பிட்டார.

அதேவேளை, இருநாடுகளுக்கிடையேயும், வான் சேவைகளை மேம்படுத்துவதற்கும ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# ஹஜ் யாத்திரைக்கு அதிகபணம் அறவிடுவோர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

ஹஜ் யாத்திரிகர்களிடம் கூடுதல் தொகையை அறவிடுகின்ற ஹஜ் முகவர்களுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஹஜ் குழு எச்சரித்துள்ளது. இம்முறை ஹஜ் யாத்திரை தொடர்பில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா இதைத் தெரிவித்தார்.

ஹஜ் யாத்திரைக்காக இலங்கைக்கு இம்முறை வழங்கப்பட்டுள்ள கோட்டா அளவு குறைக்கப்பட்டுள்ளமை உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இலங்கையில் பேச வேண்டிய சில சர்ச்சைக்குரிய விடயங்கள் மக்காவில் பேசப்பட்டதாலேயே இம்முறை ஹஜ் கோட்டா குறைவடையக் காரணமாக அமைந்துள்ளதென கொழும்பு மாநகரசபையின் உறுப்பினரும் ஹஜ் குழுவின் உறுப்பினருமான அசாத்சாலி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்முறை கோட்டா அனுமதிகள் குறைவடைந்ததன் காரணமாக சில முகவர்கள் நான்கரை முதல் ஐந்து இல்ட்சம் ரூபாவரை பணம் கேட்பதாக தொழிநுட்பப் பிரதி அமைச்சரும் ஹஜ் குழுவின் மற்றுமொரு உறுப்பினருமான பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

# சொத்து விபரங்களை சமர்ப்பிக்க கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய வேட்பாளர்களின் சொத்துகள் மற்றும் உடைமைகள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம், கால எல்லையை நீடிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்றுடன் முடிவடையவிருந்த கால அவகாசம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி.சுமனசிறி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தின் கீழ், வேட்பாளர்களின் சொத்துகள் மற்றும் உடைமைகள் தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்வது கட்டாயமாகும் எனவும். இதற்கமைய சொத்துகள் மற்றும் உடைமைகள் குறித்த விடயங்களை மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் ஒப்படைக்க வேண்டுமெனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கட்சியை விட்டு விலகவே மாட்டேன் என குருதியில் எழுதி உறுதியளித்தவன் நான்

## ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் பத்திரண

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமாக தனக்கு அறிவிக்கப்படவில்லை என மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை எனவும், அதனை தான் நிராகரிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். சமாதி சமூக அபிவிருத்தி அமைப்பின் மாத்தறை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருததினை குறிப்பிட்டார்.

தனக்கு உத்தியோகபூர்வமாகப் பதிவுத் தபாலில் கடிதம் கிடைத்ததன் பின்னர் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு பதிலளிப்பதாக நாடாமன்ற உறுப்பினர் கூறினார். ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு ஒருபோதும் விலகப் போவதிலலை என தான் மாத்திரமே குருதியினால் எழுதி உறுதியளித்துள்ளதாக நினைவூட்டிய புத்திக்க பத்திரண, அந்த உறுதி மொழி என்றுமே செல்லுபடியாகும் எனவும் தெரிவித்தார்.

எனவே வேறு கட்சிகளுடனோ அல்லது அரசாங்கத்துடன் இணைவதோ அல்லது புதிய அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவோ அல்லது அவ்வாறான வேறு எந்த விடபத்திலும் தான் ஈடுபடப் போவதில்லை என்றும் புத்திக்க பத்திரண குறிப்பிட்டார்.

கட்சியில் இருந்து நீக்கப்பட்டாலும் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே இணைந்து செயற்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

# ரயில் சாரதிகளுடைய பகிஷ்கரிப்பு தொடர்கிறது

(கொழும்பு)

கடந்த செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்திய ரயில் இயந்திரங்களை செலுத்தும் பணிகளில் இருந்து விலகுவதற்கான ரயில் சாரதிகளின் தொழிற்சங்க நடவடிககை 22ஆவது நாளாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ரயில் சாரதிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் இதுவரை கவனம் செலுத்தவிலலை என்று லொகோமோடிவ் ஒபரேடிவ் இன்ஜினியர்ஸ் எனப்படும் உந்துபொறி இயக்கப் பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஐ.எல்.ஏ திசாநாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில் இந்திய இயந்திரங்களைச் செலுத்தும் பணிகளில் இருந்து சாரதிகள் விலகிக் கொண்ட போதிலும் மாவட்ட பொறியியலாளர்களை ஈடுபடுத்தி அந்த ரயில் சேவைகள் உரியவாறு முன்னெடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே பொது முகாமையாளர் பி.ஏ.ரி.ஆரியரத்ன தெரிவித்தார்.

# பொதுமக்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவது அரசின் கடமை

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுமக்களின் வாழ்வுரிமையை தொடர்ந்தும் உறுதிப்படுத்த அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கம்பகா - ஹேனேகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் மக்களின் வாழ்க்கை முறை மேம்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார். இதுதவிர, அவர்களின் பொருளாதார நிலைகளை ஸ்தரப்படுத்த அரசாங்கம் உரிய முனைப்புகளை காட்டி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# உலகின் முதல் சுற்றுலா வழிகாட்டியாக இலங்கையைச் சேர்ந்த நோயல் தெரிவு

(கொழும்பு)



உலகில் சிறந்த முதலாவது சுற்றுலா வழிகாட்டியாக இலங்கையின் தமிழர் ஒருவர் தெரிவாகி தங்கப் பதங்கம் பெற்றுள்ளார். பிரித்தானிய சுற்றுலா சஞ்சிகையான வோன்டர்லஸ்ட் Wanderlust இந்தத் தெரிவை அறிவித்துள்ளது.

நோயல் என்ற தமிழர், இலங்கையில வசிக்கும் தேயிலை கொழுந்து பறிக்கும் இந்திய வம்சாவளி தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்தவராவார். இந்த நிலையில் தமது தெரிவு குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இத்தாலிய மற்றும் பிரித்தானியாவின் இருவர் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளனர். பேஸ்புக்கின் மூலம் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நடத்தப்பட்ட கருததுக்கணிப்பின் மூலமே நோயல் இந்த முதலிடம் கிடைத்தது.

7 பேரைக் கொண்ட குடும்பத்தின் 6 ஆவது பிள்ளையான நோயல் கிறிஸ்தவ மதகுரு ஒருவரால் இந்தத் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். தமது தொழிலில் 24 மணித்தியாலங்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள நோயல், தமது தொழிலில் இதுவரை மதுபானமோ புகைப்பிடித்த லுக்கோ உட்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

தமது வாடிக்கையாளர்களின் நலன்களை மாத்திரமே குறிக்கோளாகக் கொண்டு தாம் செயற்பட்டதாக நோயல் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவத்தின் சர்வதேச நெருக்கடிக்கு அரசியல் நோக்கங்களே காரணம்

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினருக்கு சர்வதேச ரீதியாக பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதற்கு அரசியல் உள்நோக்கங்களே பிரதான காரணமாகும். இறுதி யுத்தத்தின் போது பொதுமக்களை இராணுவத்தினர் கொலை செய்ததாகக் கூறும் குற்றச்சாட்டானது சர்வதேசத்தின் சோடிககப்பட்ட கதையாகும்.

நாட்டின் எதிரான போலிக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்நாட்டிலிருந்தும் உதவி ஒத்தாசைகள் வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும் எதிரிகளுக்கு அடி பணியாத கொள்கையுடன் சர்வதேச சவால்களுக்கு முகம் கொடுப்போம் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற இராணுவத்தின் ஊடுருவித் தாக்கும் விசேட படையணி தொடர்பான நூல் வெளியீட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்கள் உட்பட ஏனைய பிரபுகளுக்கு வீட்டை விட்டு வெளியேவர முடியாத சூழ்நிலையே அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் காணப்பட்டது. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இடத்தில் அவர்கள் சுதந்திரமாக நடமாடினார்கள்.

ஆனால் இந்த சுதந்திரம் எமக்கு காணபடவில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் சிறு குழுக்களாக ஆழஊடுருவி எதிரிகளை தாக்கியழிக்கும் விசேட படையணியை இராணுவம் ஸ்தாபித்தது. இந்தப் படையணியின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி பிரபாகரன் பதுங்கு குழியை விட்டுக் கூட வெளியே வராத நிலை ஏற்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போதும் வடக்கில் விசேட படையணியின் நடவடிக்கைகளை நிறுத்துமாறு புலிகள் வலியுறுத்தி வந்தனர். கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றதன் பின்னர் முப்பது ஆண்டு கால யுத்தத்தை மூன்று வருடம் என்ற குறுகிய காலத்திற்குள் முடிவிற்கு கொண்டு வந்தோம்.

கடந்த கால அனுபவங்களைக் கொண்டு முறையாக போர் வியூகங்களை அமைத்து எதிரிகளுக்கு பதிலடி கொடுத்தோம். புலிகள் பின்னடைவுகளைச் சந்தித்து வருகையில் அரசியல், இராணுவ மற்றும் பொருளாதார ரீதியில் நெருக்கடிக்களைக் கொடுத்து போரை நிறுத்த சர்வதேசம் முற்பட்டது. இதற்கும் அனுபவ ரீதியாக முகம் கொடுத்து சவால்களை வெற்றி கொண்டோம். எமது இராணுவத்தைப் போன்று எந்தச் சூழலிலும் செயற்படக் கூடிய வேறு இராணுவம் உலகத்தில் எங்கேயும் இல்லை.

பூரணமான நிபுணத்துவம் அடைந்த இலங்கை இராணுவத்தை இழிவுபடுத்தாது அனுபவங்களைப் பெற்றுக் கொண்டாலே உலக பயங்கரவாத சவாலை எதிர்கொள்ள முடியும். ஆனால் இன்று இலங்கை இராணுவத்திற்கு சர்வதேசத்தில் அச்சுறுத்தலான சூழலே காணப்படுகின்றது. மனிதாபிமான நடவடிக்கையின் போது பொது மக்களை படுகொலை செய்ததாக சர்வதேசம், எம் மீது குற்றம் சுமத்துகின்றது. இதனை ஒப்புவிக்க போலிச் சாட்சிகளையும் ஆதாரங்களையும் கூட தயாரித்துள்ளது.

இந்தச் சவாலையும் அரசாங்கம் புத்தி சாலித்தனமாக எதிர்கொள்ளும். பொது மக்கள் இச்சூழலை புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் இலங்கைக்கு எதிரான போலிக் குற்றச்சாட்டுகளுக்கு உள்நாட்டிலிருந்தும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்காலிக நலனுக்காக நாட்டை காட்டிக் கொடுப்பவர்களும் உள்ளார்கள். ஆனால் உலக நாடுகளின் இராணுவத் தளபதிகள் எமக்கு ஆதரவளிக்கின்றனர். அரசியல் ரீதியாக குற்றச் சாட்டுக்கள் சுமத்தபபடுகின்றமையால் அவர்களாலும் ஒன்றும் கூற முடிவதில்லை என்றார்.

## உரப்பையில் இருந்து வெடிபொருட்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார், விடத்தல்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அடம்பன் வேட்டை யார் முறிப்புக் கிராமத்தில் உள்ள மதகு ஒன்றிற்கு அருகாமையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மிதிவெடிகளை விடத்தல்தீவு விசேட பொலிஸ் குழுவினர் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர்.

விடத்தல்தீவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மன்னாருக்கு பொறுப்பான விடத்தல் தீவு விசேட பொலிஸ் அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் அடம்பன் வேட்டையார் முறிப்பு பகுதிக்குச் சென்ற குறித்த பொலிஸ் குழுவினர், அப்பகுதியில் உரப்பை ஒன்றினுள் கட்டி மறைத்து வைத்திருந்த 40 மிதி வெடிகளை மீட்டுள்ளனர். தற்போது குறித்த மிதிவெடிகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளராக பிலிப் ஹெமண்ட் நியமனம்



(கொழும்பு)

பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளரான லியம் பொக்ஸ் பதவி விலகியதை அடுத்து புதிய செயலாளராக 55 வயதாகும் பிலிப் ஹேமண்ட் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் கடந்த 2010ஆம் ஆண்டு மே மாதம் கூட்டணி கட்சிகளின் சார்பில் போக்குவரத்துத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். கடந்த 97இல் முதல்முறையாக பிரித்தானிய நாடாளுமன்றிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொடர்ந்து வர்த்தகத்துறை, உற்பத்தித்துறை மற்றும் இயற்கை எண்ணெய், எரிவாயு, நிர்மாணப் பணிகள் துறைகளில் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பண்டிகைக் காலக் கொடுப்பனவுகளை தொழிலாளருக்கு வழங்குவதில் அசமந்தம்

## வீ.ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு பண்டிகைக்கால கொடுப்பனவுகள் வழங்கப்படுவது குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. எனினும், அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாக மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவர் வீ.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையகத்தின் பல பாகங்களில் வறட்சி நிலையை காரணம் காட்டி தோட்ட நிர்வாகங்கள் வேலைநாட்களை குறைப்பதுடன், பண்டிகைக்காலக் கொடுப்பனவுகளை வழங்குவதில் அசமந்த போக்கை கடைபிடிப்பதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இது குறித்து, தோட்ட நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் அழுத்தங்களை பிரயோகிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மலையக மக்களின் நெருக்கடி குறித்து பெருந்தோட்ட முகாமைத்துவ அமைச்சின் கண்காணிப்பு நிர்வாகியிடம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் நிதிச் செயலாளர் முரளி ரகுநாதன் தெரிவித்தார்.

எனினும், இந்த விடயம் குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், பிரதியமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவிக்கையில், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான பண்டிகைக்கால கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுப்பதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். உற்பத்தி போதாமை குறித்து பெருந்தோட்ட நிர்வாகங்கள் காரணங்களை கூறினாலும், தொழிலாளர்களின் உழைப்புக் கேற்ற கொடுப்பனவுகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பிற தொழிற்சங்கங்கள் தம் மீது முறையற்ற குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருவதாகவும் முத்துசிவலிங்கம் குறிப்பிட்டார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்றோர் பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் இன்று பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் 21 உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப் பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் தமது பதவிப் பிரமாணத்தை செய்து கொள்வர்.

இதற்கான வைபவம் இன்று காலை அலரிமாளிகையில் நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. இதே வைபவத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த கல்முனை மாநகர சபை மேயர் மற்றும் உறுப்பினர்களும் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 15 மாநகர சபைகள், ஐந்து பிரதேச சபைகள் மற்றும் ஒரு நகர சபை ஆகியனவற்றை கைப்பற்றியதுடன், கல்முனை மாநகர சபையினை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடமத்திய மாகாணத்தில் போலித் தங்கக்காசு மோசடி

(கொழும்பு)

புதையல்களின் போது பெறப்பட்ட தங்கச் காசுகள் எனக் கூறி உலோகத் தகடுகளை தங்க நிறத்தில் வர்ணப்பூச்சிட்டு விற்பனை செய்யும் நடவடிக்கைகள் வடமத்திய மாகாணத்தில் அதிகரித்து வருவதாக காவல்துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என வடமத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி தயாநந்த கோரியுள்ளார்.

'மரஞ்சி' எனும் பெயருடன், குறித்த போலித் தங்கக் காசுகள் முலாம் பூசி விற்பனை செய்யும் நடவடிக்கைகள் தற்போது பிராந்தியத்தில் மலிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மோசடி நபர்கள் உலோகங்களை விநியோகித்து 250 இலட்சம் ரூபாய்கள் வரை தனவந்தர்களிடமிருந்து மோசடியாக பெற்றுள்ளனர். நிக்கவரெட்டி பிரதேச தம்பதியருக்கு போலித் தங்கக் காசுகளை விற்பனை செய்ய முனைந்த போது நேற்றுமுன்தினம் ஐந்து பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.


இவ்வாறான மோசடிக்காரர்களிடம் ஏமாறாது, அவர்கள் குறித்த தகவல்களை வழங்குமாறு வடமத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் கித்சிறி தயாநந்த தெரிவித்துள்ளார்.

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த மன்னாரில் வீடுகளில் சோதனை

(மன்னார்)

சுகாதார வாரத்தினை முன்னிட்டு டெங்கு நுளம்பை ஒழிக்கும் முகமாக வீடுகளை சோதனை செய்யும் நடவடிக்கையொன்றை மன்னார் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. இதன் போது, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி விஜயசிங்க, பிரதான பொலிஸ் பரிசோதகர் சி.ஐ.அத்துக்கோரல, மன்னார் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம். அசாத், மன்னார் நகரசபைச் செயலாளர் குரூஸ் உட்பட நூற்றுக்கணக்கான பொலிஸார் கலந்துகொண்டனர்



3. கருவிகள் மூலமாக உருவாக்கப்படும் சூழல் என்பது இயறகையைப் போலி செய்வதல்ல. இயற்கையினுள் ஒரு புதிய நிலையை கருவிகளூடாக உருவாக்குவது. இதையே ப்ரூனோ லத்தூர் வலைப் பின்னல் (network) என்று அழைக்கி றார். ஜெனிவாவில் தரைக் கடியே பிரபஞ்சம் தோனறிய தருணத் தைப் போலிசெய்ய முடியாது. தோன்றி விட்ட பிரபஞ்சத்தில் ஒரு புதிய சூழலைத்தான் உருவாக்கமுடியும்.

LHC சோதனையில் விளையும் கருந்துளை என்று கூறமுடியாது. விளையக்கூடிய கருந்துளை என்று தான் கூறமுடியும். கருந்துளை ஏற்படுமா, ஏற்பட்டால் எப்படிபபட்டதாக இருக்கும் என்பதெல்லாம் சில அவதானிப்புகளையொட்டி கணக்கிடுவதன்மூலம் உருவாகும் தர்க்கங்கள் மற்றும் அனுமானங்கள்தான். பொதுவாக புலப்பொருட்களை மனிதர் அவ

"இதுவரையில் கண்டறியாத அணுதுகள்களை உருவாக்கிப் பார்க்கப் போகிறோம். ஆனால் தர்க்கரீதியாக அவற்றை அறிவோம். அவற்றால் ஏதும் ஆபத்தில்லை" என்பதில் முரண

# பொம்மை உலகம்



தானித்து உருவாக்கும் தர்க்கங்க ளுக்கு சில எல்லைகள் உள்ளன.

1. அவதானங்கள் கருவிகளினூடாக பெறபபடுகின்றன. எனவே அவறறை உருவாக்குவதில் கருவிகளுக்குப் பங்கிருக்கிறது. ஒரு பழுதான வெப்பமானி நான் நன்றாக இருக்கும் போதே எனககு கடும் காய்ச்சலிருப்பதாகக் காட்டும். எனவே மாறுபட்ட கருவிகள் மாறுபட்ட உண்மைகளை தோற்றுவிக்கும். புவி வெப்பமடை தல் குறித்த விவாதத்தில் சமீபத்தில் வெப்பத்தை அளந்தமுறை ஒரு காலத்தில் தவறாக இருந்ததென்ற கருத்து சமீபத்தில் ·வெளியாகியுள்ளது.

2. அவதானிக்கப்பட்ட தகவல்களை அர்த்தப்படுத்துவதில் வேறுபாடுகளுக்கு இடமுள்ளது. இதன் காரணமாக அறிவியலாளர்களுக்குள் கருத்து மாறுபாடுகள் ஏற்படுகின்றன. கருந்துளைகளைப் பற்றி கவலைப்படும் அறிவியலாளர்களும் சில தர்க்கங்களை வைத்துள்ளனர்.

பாடு இருக்கிறது. தர்க்கரீதியாக அவற்றை அறிவோம் என்றால் அவற்றை ஏன் உருவாக்கிப் பார்க்க வேண்டும்? மனிதர்களால் இயற்கையைக் கட்டுப்படுத்தவோ, பிரதி செய்யவோ முடியாது. அதை வளைக்க முடியும், நீட்ட முடியும், நோண்ட முடியும். எதாவது எக்குத்தப்பாக எதிர் வினையாற்றினால் அழிய முடியும். குழந்தையிடம் கொடுக்கப்படும் பொம்மையைப் போலத்தான். பொம்மை உடைந்த பின்னர்தான் குழந்தை அழும். அதுவரை அதைக் கவனமாகக் கையாளச் சொன்னால் கேட்காது.

கடவுளாக விரும்பும் அறிவியலாளர்களுக்கு இவ்வுலகம் பொம்மை தான்.

\- ராஜன்குறை

# ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை

**சோ**கமோ, கோபமோ, வீரமோ எந்த உணர்ச்சியைக் காட்டுவதாக இருந்தாலும் நகைச் சுவை கலந்து பேசுவதை தனது கொள்கையாகவே வைத்திருப்பவர் கலைஞர். நாகரிகக் குறைவாகப் பேசிய ஒரு அமைச்சரைக் கண்டித்துப் பேசும்போதுகூட, 'தமிழன் தமிழனாக வாழ்கிறான், தன்மான உணர்ச்சியைப் பெறுகிறான் என்ற நிலை வந்தது என்று கேள்விப் படும்போதுதான், என் உயிர்போகும்' என்றே கூறியிருக்கிறார்.

அதாவது, தமிழன் இப்போது தமிழனாக வாழவில்லை. அவனுக்கு தன்மான உணர்ச்சி இன்னும் வரவில்லை என்பது கலைஞரின் கருத்து. 2006 மே முதல் 2011 மே வரை தன்மான உணர்ச்சியோடு வாழ்ந்து வந்த தமிழன், வாக்கு எண்ணிக்கை அன்றே தமிழன் என்ற உணர்வையும் தன்மான உணர்வையும் இழந்து விட்டது எவ்வளவு பெரிய கொடுமை? கலைஞர் ஐந்து வருடங்கள் ஆட்சி செய்தும், தமிழனுக்கு குறைந்தபட்சம் தன்மான உணர்வைக் கூடவா நிரந்தரமாக ஏற்படுத்தித்தர முடியவில்லை? இதென்ன மின் பற்றாக்குறையை சீரமைப்பது போன்று அவ்வளவு கஷ்டமான காரியமா?

ஐந்து முறை முதல்வராக இருந்தும் தமிழனை தமிழனாக வாழ வைக்க, அவனுக்கு தனமான உணர்வு போகாமல் இருக்க கலைஞர் ஒன்றுமே செய்யவில்லை என்பது இப்போது தான் புரிகிறது. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வந்து வந்து போகிற அந்த தன்மான உணர்வால் தமிழனுக்குத்தான் என்ன பயன்? கலைஞர் ஆட்சியில் இருக்கும்போது மட்டும் தான் தமிழனுக்கு தன்மான உணர்வு இருக்கிறது என்று எடுத்துக் கொண்டால், அது வெறும் ஐந்து வருட கான்ட்ராக்ட் சமாச்சாரம் தானா?

சரி, மத்தியிலே தி.மு.க. இன்னும் அங்கம் வகிக்கிறதே. அப்படியென்றால், தற்சமயம் மத்திய தமிழனுக்கு தன்மான உணர்வு இருக்கிறதென்றும், மாநிலத் தமிழனுக்கு அது போய்விட்டது என்றும் பொருள் கொள்ளலாமா? தன்மானம் வராவிட்டால் போகிறது. கலைஞரின் கருத்துப்படி தன்மானம் என்பது என்ன என்றுகூட புரிந்து தொலைய மாட்டேன் என்கிறதே? எப்படியோ போகட்டும்! தமிழன் தன்மான உணர்வைப் பெறும் காலம் வரும வரை தன் உயிர்போகாது என்று கலைஞர் உறுதியோடு கூறியிருப்பதால், தமிழனுக்கு அந்தத் தன்மான உணர்வு வரவேவேண்டாம். கலைஞர் நீண்டகாலம் வாழட்டும். இப்படிப் பட்ட நகைச்சுவைகளை நாட்டுக்கு வழங்க, அவர் தீர்க்காயுளுடன் வாழ வேண்டும்.

நன்றி: துக்ளக்

# சக மனிதனை தொட்டால்

**ப**ன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், அந்தக் காய்ச்சல், இந்தக் காய்ச்சல் என சமீபகாலமாக திடீர் திடீரென எட்டுத் திசையிலும் பரவும் வைரஸ் கிருமிகளால் உலகமே அல்லாடிக் கொண்டிருக்கிறது. விலை மதிப்பில்லாத மனித உயிர்களை பறிகொடுத்துக் கொண்டிருக்கிறது. இவ்வகை கிருமிகளை அழிக்கவும் தெரியாமல், தாக்கியவர்களை குணப்படுத்தவும் முடியாமல் மருத்துவ உலகம விழி பிதுங்கி நிற்பதை மூன்றாம் உலகைச் சேர்ந்தவர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கலாம்.




இதைத்தான் 105 நிமிடங்கள் ஓடக்கூடிய "கொன்ராஜியன்" ஹொலிவுட் படமாக எடுத்திருக்கிறார்கள். இந்த ஆங்கிலப் பெயரை ரஷ்ய மொழியில் எழுதினால் ஸாராசினே (Zarazheni) என்று வரும். ஆங்கில எழுத்தை போலவே இந்த ரஷ்யன் எழுத்தும் மொத்தம் 9 தான். அதற்கேற்ப கசான், அட்லாண்டா, சான் பிரான்சிஸ்கோ, சிகாகோ, பாரிஸ், ஜெனிவா, லண்டன், டோக்கியோ, பிரம் என ஒன்பது நகரங்களை சுற்றி இப்படத்தின் கதை நடக்கிறது. இதில், கசானும், பிரம்மமும் ரஷ்யாவிலுள்ள நகரங்கள்.

உலகையே ஒருவகை கிருமி தாக்குகிறது. மின்னலைப் போல அதிவிரைவாக பரவும் இக கிருமியால் மனிதர்கள் கொத்துக் கொத்தாக இறக்கிறார்கள். ஒரு கட்டத்தில் சக மனிதனை தொட்டாலே இறந்து போவோம் என்னும் நிலைக்கு நிலைமை முற்றுகிறது. இதை எதிர்த்து உலகிலுள்ள அனைத்து பிரபல மருத்துவர்களும் அடங்கிய குழு, எப்படி போராடி முறியடிக்கிறது என்பதுதான் கதை.

ஆவணப்படத்தின் கதையை போல் தெரிந்தாலும், இது உண்மையில் விஞ்ஞான விறுவிறுப்புப் படம். இதில், பிழையோ அல்லது மிகப்படுத்தலோ வந்துவிடக்கூடாது என்பதற்காக உலகின் பிரபலமான மருத்துவ - அறிவியல் தொழில்நுட்பக் குழுவினருடன் அமர்ந்து தகவல் பிழையின்றி பிசிறின்றி திரைக்கதை அமைத்திருக்கிறார்கள்.

ஸ்டீவன் சூடன்பேர்க், இப்படத்தை இயக்கியிருக்கிறார். தயாரிப்பாளர், ஒளிப்பதிவாளர், எடிட்டர், திரைக்கதை - வசனகர்த்தா என பல முகங்கள் ஸ்டீவன் சூடன்பேர்க்குக்கு உணடு. "ட்ராபிக்" படத்தை இயக்கியதற்காக ஒஸகார் விருது பெற்றிருக்கும் இவர், "ஓஷனஸ் லெவன்", "ஓஷன்ஸ் டுவல்", "ஓஷன்ஸ் தேர்டீன", "பபுல்", "சே", "செக்ஸ், லைஸ் அன்ட் வீடியோ டேப்" உட்பட பல படங்களை இயக்கியிருக் கிறார். பல படங்களுக்கு ஒளிப்பதிவும், மற்றும் 8 படங்களுக்கு எடிட்டராகவும் பணிபுரிந் திருக்கிறார். 22 படங்களை தயாரித்திருக் கிறார்.


கேட் வின்ஸ்லெட், மேட் டேமன், மேரியன் கொடிலாட் உட்பட பலர் நடித்திருக்கும் இந்த 'கொன்ராஜியன்' படத்தை வோர்னர் பிரதர்ஸ் வெளியிடுகிறது.

இதுதான் மகுடவாசகம்:

எச்சரிக்கை, சக மனிதனை தொட்டால் நீங்கள் இறந்து போவீர்கள்!

\- கே.என்.சிவராமன்

# கர்வம் தவிர்




**க**ர்வமுடையவர்கள் எப்போதும் மற்றவர்களைக் குனிந்தே பார்ப்பதால், தமக்கு மேல் இருக்கும் உயரிய விஷயங்களைப் பார்க்கும் வாய்ப்பை இழநது விடுகிறார்கள் என்கிறார், அயர்லாந்து நாட்டு எழுத்தாளர் சி.எஸ். லூயிஸ்.

தன்னை மட்டும் பல்லக்கில் உட்கார வைத்து, மற்றவர்களை மதிப்புக் குறைந்தவர்களாய்ப் பார்க்க வைப்பது கர்வத்தின் முதல் வேலை. ஒரு மன்னனைக் காண ஏழை மனிதன் ஒருவன் வந்தான். நெடு நேரக் காத்திருப்புக்குப் பின் அவனுக்கு மன்னனைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. உள்ளே சென்றதும் தனது தலைப்பாகையை அவிழ்த்து மன்னனுக்கு முன்னால் குனிந்து வணங்கினான் அவன். மன்னனும் உடனே எழுந்து கிரீடத்தைக் கழற்றி வைத்து விட்டுக் குனிந்து வணங்கினான்.

அந்த ஏழை சென்றபின் அமைச்சர்கள் மன்னனிடம் கேட்டார்கள், 'அவன் ஓர் ஏழை, அவனுக்கு முன்னால் நீங்கள் ஏன் கிரீடம் கழற்றினீர்கள் மன்னரே?'

மன்னன் சொன்னான், 'வந்தவன் செல்வத்தால் ஏழை. ஆனால் தாழ்மையில் அவன் மன்னனாக இருந்தான். அவனுக்கு முன்னால் நானும் கர்வத்தைக் கழற்றி வைத்துவிட்டு தாழ்மையை அணிவதே நல்லதெனப்பட்டது.'

தாழ்மை என்பது கர்வத்தைக் கழற்றுவதுதான். யார் வேண்டுமானாலும் எட்டி மிதிக்கும் மிதியடியாய் மாறுவதல்ல.

பிறரைப் பாராட்டும் குணம் தாழ்மையான மனதின் வெளிப்பாடு. தான் மட்டுமே சிறப்பானவன் எனும் கர்வம் எப்போதுமே பாராட்டுகளை வழங்கத் தயங்கும். எல்லோரையும் சமமாய் நேசிக்கும் மனதில் பாராட்டுகளுக்குப் பஞ்சம் இருக்காது. பிறர் உயர்ந்தவர் என நாம் கருதும் வினாடியில் நாம் புதிய விஷயங்கள் சிலவற்றைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பும் உருவாகிறது என்பதை கவனத்தில் கொள் வோம். 'விலக்கிவிட மிகவும் கஷ்டமான விஷயம் கர்வம்தான். நான் கர்வத்தை விட்டு விலகி தாழ்மையாய் மாறிவிட்டேன் என்று சொல்லும்போது கூட, "நான் தாழமையின் சின்னம்" என கர்வம் கொள்ள முயல்கிறது மனது என்கிறார் பெஞ்சமின் பிராங்ளின்.

கர்வம் என்பது எந்த விஷயத்துக்காக வேண்டுமானாலும் எழலாம் என்பதையே அவருடைய வாசகங்கள் படம் பிடிக்கின்றன. 'நான் நல்லவன்', 'நான் பிறரை மதிப்பவன்', 'நான் எளிமையானவன்', 'நான் கடவுள் பக்தி நிறைந்தவன்', 'நான் ஏழைகளுக்கு உதவுபவன்' என எந்த முளையிலிருந்து வேண்டுமானாலும் கர்வத்தின் தரு தழைத்து வளரலாம்.

தொட்டதுக்கெல்லாம் அடுத்தவர்களோடு ஒப்பிட்டு, அவர்களை விட நான் பெரியவன் என நினைப்பதுதான் கர்வத்தின் காட்டுத் தீயில் எண்ணை ஊற்றும் சமாசாரம் ஒப்பீடுகளினால் எதுவும் நிகழப் போவதில்லை. அதனால்தான் ஆழமான ஆன்மிகவாதிகள் தங்களை இறைவனோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். அது அவர்களுக்குத் தாழ்மையை கற்றுக் கொடுக்கிறது.

சின்னச் சின்ன விஷயங்களில் இருக்கும் அழகையும், வியப்பையும் ரசிக்கத் தொடங்குங்கள். தாழ்மை உங்களை வநதடையும். ஆர்வமும், தேடலும் உலகின் அழகிய பக்கங்களை அவிழ்த்து வைக்கும். நமது அறியாமையின் கதவுகளை ஒவ்வொன்றாய்த் திறக்கும். கூடவே நமது கர்வத்தின் திரைச்சீலைகளை ஒவ்வொன்றாய்க் கிழிக்கும்.


பிறர் மீதான உண்மையான கரிசனை அவரையும் நம்மைப் போலவே நேசிப்பதில் தொடங்குகிறது. அது நமது தாழ்மையின் பயணத்தில் நிகழ்கிறது.

\- சேவியர்

இந்தியச் செய்திகள்

# ஊழல் இரகசியத் தகவல்களை வெளியிடுவோரை பாதுகாக்க சட்டம்

## விரைவில் வரும் என்கிறார் மன்மோகன் சிங்



(புதுடில்லி)

அரசு நிர்வாகத்தில் ஒளிவுமறைவற்ற தன்மையை உறுதி செய்ய தகவல் பெறும் உரிமை மிகவும் பயனுள்ள ஒரு கருவியாகச் செயல்பட வேண்டும் என மத்திய அரசு விரும்புகிறது.

அதேநேரத்தில் ஊழல் குறித்த இரகசியத் தகவல்களை அம்பலப்படுத்துவோரைப் பாதுகாக்க அடுத்த சில மாதங்களில் சட்டம் கொண்டு வரப்படும் என பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

மத்திய தகவல் ஆணையத்தின் இரண்டு நாள் மாநாடு டில்லியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. இந்த மாநாட்டில் பேசிய பிரதமர் மன்மோகன் சிங் கூறியதாவது: தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் தங்களின் நிர்வாகத்தில் சிலர் அத்துமீறி நுழைவதாக அரசில் உள்ள சில பிரிவினர் நினைக்கின்றனர்.


அதனால் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். எந்தச் சூழ்நிலையிலும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் தளர்வு ஏற்படுத்தப் படாது.

பொது நிர்வாகத்திடம் உள்ள குறைவான வளம், குறிப்பிட்ட கால அளவு மற்றும் தகவல்களை வெளியிடுதல் இடையே ஒரு சரி சமமான நிலையைப் பின்பற்ற வேண்டியது அவசியம்.

மேலும் தகவல் பெறும் உரிமையானது நேர்மையைச் சீர்குலைப்பதாக அமையக்கூடாது. ஊழல் குறித்த இரகசியத தகவல்களை வெளியிடுவோரைப் பாதுகாப்பதற்கான சட்டம் அடுத்த சில மாதங்களில் இயற்றப்படும் என்றார்.

# அராஜகம் மூலம் வெற்றிபெறும் ஜெயா.வின் எண்ணம் பலிக்காது

(சென்னை)



தேர்தலில் அராஜகத்தின் துணையோடு வெற்றிபெற கணக்கு போட்டால் அது நடக்காது என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். சென்னை மாநகராட்சி மேயர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்துப் உரையாற்றுகையில்,

ஜெயலலிதா, மக்களுக்கு நல்ல பணிகள் செய்வதை விட்டுவிட்டு, பழிவாங்கும் நோக்கத்தில் பொய் வழக்கு போடுகிறார். மிசா, தடா உள்ளிட்ட பல்வேறு இன்னல் களை நாம் சந்தித்துள்ளோம். நடந்து முடிந்த திருச்சி மேற்கு இடைத்தேர்தல் முடிவு வரும் 20 ஆம் திகதி அறிவிக்கப்படும். அதில் தி.மு.க 20,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறும் என்பதை, உளவுத்துறை அதிகாரிகளே ஜெய லலிதவுக்கு தெரிவித்துள்ளனர்.

இந்த 5 மாத அ.தி.மு.க ஆட்சியில் மககள் பல்வேறு துயரங்களை அனுபவித்துள்ளனர். அல்லல்பட்ட மக்கள், நல்ல தீர்ப்பு தர காத்திருக்கின்றனர். இந்த தேர்தலில் அராஜகத்தின் துணையுடன் வெற்றி பெறவேண்டும் என்று கணக்கு போட்டால் அது நடக்காது. உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் வீடியோ உளளிட்ட அனைத்து வசதிகளும் செயது தரப்படவுள்ளது. அதையும் மீறி அ.தி.மு.க.வினர் அராஜகத்தில் ஈடுபட்டால், அதற்கு பொலிஸார் பதில் கூறியே ஆக வேண்டும் எனத் தெரிவித்தார்.

# ஐயப்பனைத் தொட்ட நடிகையின் வழக்கு விசாரணைக்குத் தடை



(திருவனந்தபுரம்)

சபரிமலை ஐயப்பன் விக்கிரகத்தை தொட்டது தொடர்பாக நடிகை ஜெயமாலா உட்பட 3 பேருக்கு எதிராக நடக்கும் வழக்கை விசாரிக்க கேரள உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. சபரிமலையில் 2004ம் ஆண்டு பிரபல ஜோதிடர் உன்னிகிருஷ்ண பணிக்கர் தலைமையில் தேவபிரசன்னம் நடந்தது. அப்போது, ஐயப்ப விக்கிரகத்தை இளம்பெண் ஒருவர் தொட்டதால் புனிதம் கெட்டு விட்டதாக கூறினார்.


அதற்கு மறுநாளே, விக்கிரகத்தை தொட்டது நான்தான் என பிரபல கன்னட நடிகை ஜெயமாலா அறிவித்தார். இது தொடர்பாக நடத்திய விசாரணை யில், உன்னிகிரு'ண பணிக்கரும் ஜெயமாலாவும் சேர்ந்து நாடகமாடியது தெரிய வந்தது. இதையடுத்து, கடந்த ஆண்டு டிசம்பரில் ஜெயமாலா, உன்னி கிருஷ்ண பணிக்கர் மற்றும் அவருடைய உதவியாளர் ரகுபதி ஆகியோர் மீது மத உணர்வை புண்படுத்தியதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு ரான்னி முன்சீப் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்த வழக்குக்கு தடை விதிக்கக்கோரி கேரள உயர் நீதிமன்றத்தில் ஜெயமாலா மனு தாக்கல் செய்தார். அதில், "சபரிமலை கோயிலுக்கு பெண்கள் செல்லக் கூடாது என 1991 இல் தடை விதிக்கப்பட்டது. நான் அதற்கு முன்பே சபரிமலை சென்றேன்.

எனவே, என் மீதான வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். இதை நேற்றுமுன்தினம் விசாரித்த நீதிபதி பாலகிருஷ்ணன், ஜெயமாலா உட்பட 3 பேருக்கு எதிரான வழக்கை விசாரிக்க ரான்னி நீதிமன்றத்துக்கு தடை விதித்து உத்தரவிட்டார்.

# அ.தி.மு. கட்சியின் ஆட்சியில் பொலிஸ் அத்துமீறல் அதிகரிப்பு

(கோவை)



அ.தி.மு.க ஆட்சியில் பொலிஸ் அத்துமீறல் அதிகரித்து விட்டது என தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் கோவையில் நடந்த பிரசாரத்தின் போது தெரிவித்துள்ளார். தே.மு.தி.க - மார்க்சிஸ்ட் கூட்டணி மேயர் வேட்பாளர் சிவஞானம் மற்றும் கவுன்சிலர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் நேற்று முன்தினம் கோவையில் துடியலூர், கணபதி, உக்கடம் ஆத்துப் பாலம் ஆகிய பகுதிகளில் பிரசாரம் செய்தார்.

அப்போது விஜயகாந்த் பேசியதாவது,

கோவை மாவட்டம் தொழில்வளர்ச்சி நிறைந்த மாவட்டம். இந்த ஆட்சியில் தொழில் நிறுவனங்கள் போதிய நிதியுதவியின்றி தொழிலாளர்களுக்கு போனஸ் கூட வழங்க இயலாத நிலை உள்ளது. சமீபகாலமாக பொலிஸாரின் அத்துமீறல் அதிகரித்து வருகிறது.

இதறகு துடியலூர் காவல்நிலையத்தில் சட்டத்தரணி தாக்கப்பட்ட சம்பவமே சாட்சி. மக்கள் தங்களை ஏமாறறும் கட்சிகளுக்கு சரியான பதிலடி கொடுக்கும் நேரம் இது தான். தே.மு.தி.க கூட்டணிக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

உள்ளாட்சி என்பது உங்களுக்கான ஆட்சி. உங்கள் தேவைகளை யார் உடனடியாக நிறைவேற்றுவார்கள் என்பதை சிந்தித்து நீங்கள் வாக்களிக்க வேண்டும். தற்போது விசைத்தறியாளர்களுக்கும், ஜவுளி உற்பத்தி நிறுவனங்களுக்கும் ஊதியம் குறித்து பேச்சுவார்த்தை சரியான முடிவை எட்டாமல் உள்ளது. ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்கு வந்த ரூ.3,500 கோடி என்ன ஆனது என்றே தெரியவில்லை என்றார்.

# திகார் சிறையில் அமைச்சரவை கூட்டம் நடைபெறும் சோக நாள் வெகு விரைவில்

## அத்வானி

(உமரியா)

நாட்டில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியினர் காலத்தில் ஊழல் மட்டுமே செழித்து வருகிறது. கறுப்புப்பணம் - ஊழல் ஒழிப்பிற்கென எவ்வித பொறுப்பான நடவடிக்கையும் எடுக்காத இந்த அரசு பணவீக்கத்தை மட்டுமே உருவாக்கி வருகிறது. ஊழல் காரணமாக நடக்கும் நிலையைப் பார்த்தால் அமைச்சரவை கூட்டம் திகார் ஜெயிலில் நடக்கும் என்ற நிலை வெகுதூரத்தில் இல்லை என்றார் அத்வானி.

கடந்த 11 ஆம் திகதி முதல் ஊழலுக்கு எதிரான யாத்திரையை அத்வானி தொடங்கினார். நாடு முழுவதும் பல்வேறு இடங்களை தொடும் இந்த யாத்திரை மக்கள் மத்தியில் ஊழல், கறுப்பு பணம் விவகாரம் தொடர்பாக முழு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என பா.ஜ., நம்பிக்கையில் உள்ளது.

மத்திய பிரதேசம் உமரியாவில் நேற்று யாத்திரையின் போது அத்வானி பேசுகையில்,

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அமைச்சர்கள் ஊழல் புரிந்து வருவது இந்தியாவின் ஜனநாயகத்திற்கு துரதிருஷ்டவசமாக அமைந்து விட்டது. பலரும் ஊழலில் சிக்கி ஜெயிலுக்கு சென்ற வண்ணம் உள்ளனர். அமைச்சரவை கூட்டம் டில்லி திகார் சிறையில் நடக்கும் அந்த சோக நாள் வெகுதொலைவில் இல்லை என்றார்.

## அண்ணா அறிவாலய நில விவகாரம் சவாலை ஏற்றார் கருணாநிதி

(சென்னை)

அண்ணா அறிவாலய நில விவகாரத்தில் ஜெயலலிதா விடுத்த சவாலை ஏற்றுக் கொள்கிறேன் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், அண்ணா அறிவாலய நில வவகாரம் குறித்து ஜெயலலிதா எனக்கு திருச்சி கூட்டத்தில் சவால் விடுத்துள்ளார். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். பத்திரத்தில் ஜமீன்தாரின் குடும்பத்தினர் பலர் கையெழுத்து இடவில்லை. ஜமீன குடும்பத்தில் உள்ள பத்து பேருக்குப் பதிலாக சுப்புரத்தினம் நாயுடு மட்டும் கையொப்பம் இட்டு இருக்கிறார்.

ஆனால் இந்த இடத்திற்கான பத்திரத்தில் சுப்புரத் தினம் நாயுடு பெயர் இல்லை, இதை விற்பதற்கான அதிகாரம் அவருக்கு இல்லை. இதை நான சொல்லவில்லை. சரக்காரியா கமிஷன் அறிக்கையில் குறிப்படபபட்டு இருக்கிறது. ஆக, அந்தக் காலததிலேயே நில அபகரிப்பில் கைதேர்ந்தவர் கருணாநிதி என்று ஜெயலலிதா குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களின்....

(14ம் பக்கத் தொடர்ச்சி....)


இவ்வாறு செய்வதன் மூலம் தமிழர்களைக் குறித்த சந்தேகமும் தவறான எண்ணமும் பகையும் அச்சமும் அவர்களிடத்தில் நீங்கும். இது இனவாத அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் அல்லது அதைப் பலவீனப்படுத்தும் ஒரு நிலையை ஏற்படுத்தும்.

இலங்கைத் தீவின் புவியியல் மறறும் வாழ்நிலை போன்ற காரணங்களின் நிமித்தம் சிங்களச் சமூகத்தினருடன் உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்று சிந்திக்கும் ஒரு அரசியற் சிந்தனையை, அரசியல் யதார்த்தத்தைப் பற்றித் தமிழர்களிடத்திலும் ஒரு புரிதலை இது ஏற்படுத்த வாய்ப்பளிக்கும். ஆகவே, தமிழர்கள் இப்போது மிக நிதானமாக தமது கால்களை வைக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில், இன்னும் அவர்கள் நடுக்கடலில் தவிக்க முடியாது. காத்தற்கடவுள்களின் பின்னே குருட்டு நம்பிக்கைகளுடன் அலைய முடியாது. 'நம்பிய தேவதைகள் சாத்தான்களாகி விட்டன' என்று மீண்டும் மீண்டும் தோல்விக்குப் பின்னே யாரையும் வசைபாடி நொந்து கொள்ள வேண்டியதில்லை.

தமது நியாயங்களைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்கும் அதேவேளை சிங்களச் சமூகத்துக்கும் அதை எடுத்துரைக்க வேண்டும். அதுவே நிரந்தரப் பகைகளை முடிவுக்குக் கொண்டு வரும. அல்லது தணிக்கும். என்னதானிருந்தாலும் இலங்கைத் தீவிலிருக்கும் சமூகங்கள் முரண்பட்டுக் கொள்ளும்வரையில், அது அமைதிப் பிராந்தியமாக இருக்க முடியாது. அமைதியற்ற நிலையைச் சாதமாகப் பயன்படுத்தி ஆதிககச் சகதிகள் தென்னாசியப் பிராந்திய ஆதிககத்துக்கு முயற்சிக்கும். இதற்கு இடமளித்தால், இலங்கையர்களுக்கு நிம்மதியான வாழ்க்கை கிடைக்காது.

உலகச் செய்திகள்

# அமைதிப் போராட்டக்காரர் கைது; குற்றம் சாட்டுகிறது மனித உரிமை ஆணைக்குழு



(கரியாத்)

அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சவுதி அரேபியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.சவுதி அரேபியாவில் சிறுபான்மையிரான சியா பிரிவினர் உள்ள கிழக்கு பிராந்தியத்தில் இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளதாக குறித்த மனித உரிமை அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இரண்டு முதியவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட் டதை அடுத்து கடந்த மூன்றாம் திகதி வன்முறைகள் இடம்பெற்றிருந்தன. எனினும் இந்த வன்முறைகளுக்கு வெளிநாடுகளின் தலையீடுகளே காரணம் என சவுதி அரேபியா குற்றஞ்சாட்டியுள்ளதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடப்படுகின்றது. சியா பிரிவினரை பெரும் பான்மையாக கொண் டுள்ள ஈரானே இவ்வாறான வன்முறைகளுக்கு காரணம் என சவுதி அரேபியா அடிக்கடி கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது

# சிரியாவின் ஆர்ப்பாட்டங்கள் உள்நாட்டு யுத்தமாக மாறலாம்

## எச்சரிக்கிறார் ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகர்

சிரியாவில் இடம்பெறும் அரசுக்கு எதிரான ஆர்பாட்டம் உள்நாட்டு யுத்தமாக மாற்றமடையும் சாத்தியங்கள் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.பொதுமக்களை பாதுகாப்பதற்கு சர்வதேச ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் நவனீதம் பிள்ளை அழைப்பு விடுத்துள்ளார்.



கடந்த மார்ச் மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டுவரும் அரசுக்கு எதிரான ஆர்பாட்டங்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தை தாண்டியுள்ளதாக கொல்லப்பட்டவர்களில் 187 சிறுவர்களும் அடங்குகின்றன. கடந்த 10 நாட்களில் மாத்திரம் 100 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆர்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களுக்கு காரணமான ஆயுதமேந்திய பயங்கரவாத குழுவினரால் ஆயிரத்து 100 பாதுகாப்புத் தரப்பினரும் கொல்லப்பட்டுள்ளதாக சிரிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.இந்த நிலையில் ஆயிரக்கணக்கான சிரிய பிரஜைகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், துன்புறுத்தப்படுகின்றனர்.

சிரியா அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு மேற்குலக நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றபோதிலும், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தன.எனினும் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டவாறு மறுசீரமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் சிரிய அரசாங்கத்தினை ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளும் வலியுறுத்தியிருந்தன

# ஓவியத்தின் பெறுமதி 24 கோடி




(லண்டன்)

லூசியென் பிராய்டு வரைந்து புகழ்பெற்ற ஓவியம் இங்கிலாந்தில் ரூ.24.46 கோடிக்கு விற்பனையானது. கிடைப்பதற்கு அரிய ஓவியங்கள் உட்பட கலைப் பொருட்களை லண்டனைச் சேர்ந்த சோதெபை நிறுவனம் ஏலம் விட்டு வருகிறது. இந்நிலையில் லூசியென் உள்ளிட்ட பல கலைஞர்களின் ஓவியங்களை ஏலம் விட்டது. அதில் 1952ம் ஆண்டு லூசியென் வரைந்த சிறுவனின் தலை கொண்ட புகழ்பெற்ற ஓவியம் பிரீமியம் உட்பட ரூ24.46 கோடிக்கு விற்பனையானது.

ஆனால், இது ரூ.30.80 கோடிக்கு ஏலம் போகும் என்று கணிக்கப்பட்டது. இந்த ஓவியத்தை வாங்கியவரின் பெயர் வெளியிடப்படவில்லை. மேலும் அன்றைய தினம் ஏலம் போன மொத்த ஓவியங்களின் மதிப்பு ரூ.303.82 கோடி என்று தெரிவிக்கப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற உளவியல் நிபுணர் சிக்மண்ட் பிராய்டின் பேரனான லூசியென் (88) ஜூலையில் இறந்தது குறிப்பிடத்தக்கது.

# குற்றவாளியாக காணப்பட்ட பி.பி.சி. செய்தியாளர்

தஜிகிஸ்தானில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக பி.பி.சி செய்தியாளர் ஒருவர் அந்த நாட்டு நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தடைசெய்யப்பட்ட அமைப்பொன்றிற்காக குறித்த செய்தியாளர் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

குறித்த செய்தியாளருக்கு மூன்று வருட கால சிறைத்தண்டனை அறிவிக்கப்பட்ட போதிலும், பொதுமன்னிப்பை வழங்கிய நீதிபதி அவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். கடந்த ஜூன் மாதம் குறித்த செய்தியாளர் கைது செய்யப்பட்டமைக்கு சர்வதேச ரீதியாக கண்டனம் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் தனது பணிகளின் நிமிர்த்தமே குறித்த அமைப்பின் உறுப்பினர்களை சந்தித்ததாக குறித்த பி.பி.சி செய்தியாளர் தெரிவித்திருந்தார்

# இயற்கையின் கடும் சீற்றம்; அமெரிக்காவில் 40 பேர் மரணம்



(வோஷிங்டன்)

மத்திய அமெரிக்காவில் மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தங்கள் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்வடைந்துள்ளது. இரண்டு சுறாவளிகள் குறித்த பிராந்தியத்தை தாக்கியதை அடுத்து இந்த அனர்த்தங்கள் இடம்பெற்றுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குவட்டமாலாவில் 21 பேரும், நிக்காரகுவாவில் ஆறு பேரும், எல் சல்வடோரில் மூவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. மெக்சிக்கோவின் பசுபிக் கடற்கரைப் பகுதியை தாக்கிய ஜோவா என்ற சுறாவளி காரணமாக எட்டு பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மத்திய அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோவில் வெள்ளம் காரணமாக ஒரு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

தன்னையறியத் தனக்கொரு கேடில்லை.

**– திருமூலர்**

தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும்.

**– இராமலிங்க வள்ளலார்**

தன்னைத் தான் ஆளும் தன்மை நான் பெற்றிடில், எல்லாப் பயன்களும் தாமே எய்தும்.

**– பாரதி**

தன்னை அறிவது அறிவாம் அஃதன்றிப் பின்னை அறிவது பேயறிவாகும்.

**– திருமந்திரம்**

தன்னை அறிந்தார் நாயகனைத் தானறிவார்.

**– இஸ்லாம்**

தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச் செம்மையில் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே!

**– தேவார நெறி**

'நான் யார்' என்ற விசாரத்தில் ஈடுபட்டுச் சரியான விடை காணிடலே வெற்றி.

**– ரமண மகரிஷி**

உன்னை நீ அறிவாயாக!

**– சோக்கிரட்டீஸ்**

எனக்கு யாருமே இல்லை, நான் கூட.

**– நகுலன்**

தன் வாழ்வைத் தேடுபவன் அதை இழப்பான்.

**– யேசுபிரான்**

நான் சிந்திக்கிறேன், ஆகவே நான் இருக்கிறேன்.

**– டெகார்த்தே**

ஆயிரம் வீரர்களைப் போரில் வெல்லலாம். ஆனால் தன்னைத்தானே வெல்பவனே உண்மையான வீரன்.

**–பௌத்தம்**

மற்றவர்களை அறிவது ஞானம். நம்மை அறிந்து கொள்வது பேரொளி.

**– லாவோ சூ**

நான் உன்னையன்றி இலேன் கண்டேன் நாரணனே, நீ என்னையன்றி இல்லை!

**– திருமழிசையாழ்வார்**

நாடொணாத அமிர்தம் உண்டு நான் அழிந்து நின்ற நாள்.

**– சிவவாக்கியர்**

சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் மனம் இறக்கக் கல்லார்க்கு வாய் ஏன் பராபரமே.

**– தாயுமானவர்**

தன்னில் மனிதன் அடங்க முடியும் என்றால் அது தன்னைப் போல பிரபஞ்சமும் காதலிக்கிறது; துயருறுகிறது என்று உணரும் நிலையில்தான் சாத்தியம்.

**– அல்பெர் காம்யூ**

உலகத்தின் மையம் இமயமலை என்கிறார்கள். அது உண்மையில்லை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு பிரபஞ்சமிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு மனிதனும் பிரபஞ்சத்தின் மையப்புள்ளிதான்.

**– தலாய் லாமா**

புற உலகைப் பாதிக்கும் திறன் என்பது ஒருவருக்குத் தன் உலகைக் கட்டுப்படுத்துவதிலிருந்தே துவங்குகிறது.

**– காந்தி**

தனிமனிதனைச் சமூகத்தோடு இணைத்தது பக்தி இயக்கம். 'நான் அதுவாக இருக்கிறேன்' [தத்துவமஸி] என்பதைக் காட்டிலும் 'அது'வை 'மனிதனாக'க் [அவதாரம்] கண்டு மனிதத்தைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தியது பக்தி இயக்கம். 'மானுடம் வென்றதம்மா' என்கிறான் கம்பன்.

**– இந்திரா பார்த்தசாரதி**

இத்தரை மீதினிலே யிந்த நாளிலே, இப்பொழுதே முக்தி சேர்ந்திட நாடிச், சுத்த அறிவு நிலையில் களிப்பவர், தூயவரா மென்றிங்கு ஊதடா சங்கம்.

**– பாரதி**

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.

**– தாயுமானவர்**

# தமிழர்களின் காத்தற் கடவுள்கள்

பெரும்பாலான தமிழர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இப்போது அதிகமதிகம் நம்புவது மேற்குலகத்தை. அதிலும் அமெரிககாவையே. அதாவது ஈழத்தமிழர்களின் 'காத்தற் கடவுளாக' இப்போது அமெரிக்கா உள்ளது என்பதே இன்றைய நிலை.

அமெரிக்கத் தூதர்கள், அமெரிக்கப் பிரதானிகள், அமெரிக்க அதிபர் போன்றோரைச் சந்திப்பதிலும் அவர்களுக்காகக் காத்திருப்பதிலும் அவர்களிடம் கோரிக்கை விடுவதிலும் அவர்களுக்கான அமைப்புகளை (ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு) இயக்குவதிலும் அதிக முயற்சிகளை எடுக்கிறார்கள், இவர்கள்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மத்திய ஆசியா மற்றும் தென்னாசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி ராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்கைச் சந்திப்பதற்கு இந்தத் தமிழர்கள் காட்டிய சிரத்தையும் இந்த வகையிலானதே. 'முறையிடுவது ' வரங்கேட்பது' என்ற நிலையில் தமிழரின் இந்தச் சந்திப்புகள் அமைகின்றன.

முன்னர் ஒரு காலம் இந்தியா இந்த இடத்தில் இருந்தது. பிறகு அது அவர்களுடைய காலை வாரியதால், ஒரு கட்டத்தில் இந்தியாவை அவர்கள் எதிர்நிலைக்குக் கொண்டு போனார்கள். இந்தியாவையும் அது ஈழப்பிரச்சினையின் பொருட்டு இலங்கைக்கு அனுப்பிவைத்த இந்திய அமைதிப்படையின் பணிகளையும் satanic forces என்று தமிழர்கள் விமர்சிக்கும் அளவுக்கு நிலைமை மாறியது.

இடையில் தமிழர்கள் நோர்வேயை நம்பினார்கள். ஐக்கிய நாடுகள் சபையை நம்பினார்கள். சில சந்தர்ப்பங்களில் பிரிட்டனை நம்பினார்கள். பிரிட்டனுக்கு அப்படியொரு கடமை இருக்கிறதென்றும் பிரிட்டனே தமிழர்களின் அந்தஸ்துகளையும் உரிமைகளையும் சிங்களவர்களிடம் தாரை வார்த்துவிட்டுச் சென்றதென்றும் அவர்கள் கூறினார்கள். போதாக்குறைக்கு, தாம் எப்போதும் பிரிட்டனுக்கு விசுவாசமாகவே இருந்ததால், அந்த விசுவாசத்தைப் புரிந்து கொண்டு, அதற்குப் பிரதியுபகாரமாக இந்தப் பிரச்சினைக்கான தீர்வுக்கு உதவ வேண்டும் என்று பிரித்தானிய அரசுப் பிரதிநிதிகளிடம் கேட்டார்கள்.

ஆனால் எந்த நம்பிக்கையும் தமிழரகளைக் கரை சேர்க்கவில்லை. எந்த நம்பிக்கையும் நம்பிக்கைக்குரியதாகவோ அற்புதங்களை நிகழ்த்தக் கூடியதாகவோ இருக்கவும் இல்லை. எந்தக் கோரிக்கைகளும் மதிப்பாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக இந்த நம்பிக்கைகள் இறுதியில் அல்லது ஒரு கட்டத்தில் அவர்களை நடுக கடலில் கைவிட்டதாகவே

**- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்**

இருக்கின்றன. அல்லது தாம் நம்பிக்கை வைத்த தரப்புகள் தமக்குத் துரோகம் இழைத்து விட்டதாகத் தமிழர்கள் கருதும் நிலையே ஏற்பட்டது! ஏற்படுகிறது.


தமிழர்கள் இப்படி வெளியாரின் மீது நம்பிக்கை வைக்கும்தோறும் சிங்களவர்கள் தமிழர்களின் மீது எதிர் நிலை மனோபாவத்தையே கொள்கின்றனர். இது முரண்பாட்டை மேலும் மேலும் கூர்மையாக்குகிறது. இது தான் முக்கியமான பிரச்சினை.

இந்தியாவைத் தமிழர்கள் தமது நெருங்கிய நண்பனாகக் கொண்டிருந்த போது, சிங்களவர்களோ தமிழர்களையும் இந்தியாவையும் தங்களின் எதிரிகளாகக் கருதினார்கள். இந்தியாவைக கொண்டு தங்களை மிரட்டுகிறார்கள் என்றும் இந்திய ஆக்கிரமிப்புக்கு அல்லது இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்குத் தமிழர்கள் உடந்தையாக இருக்கிறார்கள் என்றும் அவர்கள் கருதினார்கள். (ஆனால், இறுதியில் இந்தியா, சிங்களவர்களுடன் நெருக்கமாகவும் தமிழர்களுக்கு எதிராகவும் மாறியது வெறும் கதையல்ல, உண்மை).

பின்னர், நோர்வேயுடன் தமிழர்கள் தங்களை நெருக்கமாகக் காட்டிக் கொண்டனர். இதனால் நோர்வேயையும் தமிழர்களையும் சிங்களவர்கள் எதிர் மனோபாவத்துடனேயே பார்த்தாரகள். (நோர்வே யாருடைய நிகழ்ச்சி நிரலில் இயங்கியது என்பது பரகசியமான ரகசியம்).

இப்போது மேற்குலகத்தோடு தமிழர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். அதிலும் அமெரிக்காவை அவர்கள் தற்போதைய காத்தற் கடவுளாகக் கருதிக் கொள்கிறார்கள். எனவே, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தைத் தமிழர்கள் தங்களின் நெருங்கிய கூட்டாளிகளாகவும் இந்தத் தரப்பே இலங்கையில் நீதி, நியாயத்தை நிலைநாட்டப் போகிறது என்பதாகவும் கருதியிருக்கிறார்கள்.

ஆகவே, இப்போதும் ஏறக்குறைய அதே நிலைதான் தோன்றியுள்ளது. எனவே, மேற்குலகத்தையும் தமிழர்களையும் தமது எதிரிகளாகக் கருதுகிறார்கள் சிங்களவர்கள் என்பதால், எப்போதும் தமிழர்களும், தமிழர்கள் தமது ஆதரவுச் சக்திகளாகக் கருதுகின்ற தரப்புகளும் சிங்கள மக்களின் மனதில் எதிர்நிலைச் சக்திகளாகவே படுகின்றன. இது நிலைமைகளை மேலும் மேலும் கடினத் தன்மையை நோக்கித் தள்ளுகிறது.







அதாவது, இலங்கையை ஆக்கிரமிக்க முனைகின்ற, இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுகின்ற, இலங்கைக்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற தரப்புகளைத் தமது கூட்டாளிகளாக எப்போதும் தமிழர்கள் கொள்கின்றனர் என்பதே சிங்களவர்களின் கோபமாகிறது. சாதாரண சிங்கள மக்களிடம் இத்தகையதொரு அபிப்பிராயத்தை சிங்கள உயர்குழாத்தினர் மிக இலகுவாகச் செய்து விடுகின்றனர். இதற்குத் துணையாக சிங்கள ஊடகங்கள் செயற்படுகின்றன. இதனால், தமிழர்கள் எப்போதும் தமக்கு எதிரான சக்திகளுடன் சேர்ந்து கொண்டு, தங்களைப் பயமுறுத்துகிறார்கள், தமககுத் தொல்லை தருகிறார்கள், தங்களைக் காட்டிக் கொடுக்கிறார்கள் என்ற மனப்பதிவு சிங்களத் தரப்பிடம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இலங்கையின் பிரதான சமூகங்கள் இரண்டும் மேலும் மேலும் விலகிச் செல்லும் நிலையே தென்படுகிறது. சமூகங்களுக்கிடையிலான பிரிவுக் கோடு அல்லது முரண்நிலை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இந்தத் தவற்றில் சிங்களத் தரப்பிலும் சம பொறுப்புண்டு. தமிழர்களின் அரசியற் தீர்மானங்களிலும் தெரிவுகளிலும் தவறுகள் இருந்தாலும் நாம் அதை மட்டும் குறை கூறி விட முடியாது. தமிழர்கள் பிற சக்திகளையோ பிற தரப்புகளையோ நம்பியிராத ஒரு நிலையை சிங்களத் தலைமைகள் ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஒடுக்கப்படும் இனமொன்றை, அதிலும் சிறுபான்மை இனமொன்றைச் சரியாக நடத்தியிருக்க வேண்டிய பொறுப்பு பெரும்பான்மைச் சமூகத்தினராகிய சிங்களவர்களுக்கே அதிகமுண்டு.

ஏனெனில், அவர்களே பெரும்பான்மையினராகவும் ஆட்சி அதிகாரத்திலும் இருக்கின்றனர். ஆகவே, அவர்களே ஏனையோரைச் சரிநிகராக நடத்த வேண்டும். பெருந்தன்மையாக நடந்திருக்க வேண்டும். ஆனால், இதை அவரகள் செய்யத் தவறியுள்ளனர். இதற்கு ஒத்துழைப்பதில் தமிழ் அரசியற் தலைமைகளின் அணுகுமுறைக் குறைபாடுகளும் அரசியற் குறைபாடுகளும் இருநதன என ஒரு வாதத்தை சிங்களத்தரப்பினர்கள் முன்வைக்கலாம்.

அப்படியானால், சிங்களத்தரப்பினர் களுடன் இணக்கத்துக்குத் தயாராக இருந்த சக்திகளைப் பயன்படுத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கோ அதிகாரப்பரவலாக்கத்துக்கோ சிங்களவர்கள் வந்திருக்கலாம் அல்லவா!. அதிலும் இடதுசாரிகள் இந்தப் பிரச்சினை தொடர்பாக பல சந்தர்ப்பங்களிலும் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். இதில் சிங்கள இடதுசாரிகளின் பங்குகளையும் நாம் சேர்த்துப் பார்க்க வேண்டும். ஒரு மொழிக் கொள்கை முன்வைக்கப்பட்டால், இந்த நாடு இரண்டாகும் என்று எச்சரித்த கொல்வின் ஆர். டி. சில்வா தொடக்கம் பல இடதுசாரிகள் தமிழர்களுடைய உரிமைக்கோரிக்கைகள் தொடர்பாக தமது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். இவை எதற்கும் சிங்கள உயர் குழாம் அல்லது அதிகாரத் தரப்புகள் செவி கொடுக்கவில்லை. எனவே தமிழர்கள் மாற்று நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

எனவேதான் அவர்கள், இந்தியாவை நம்பினார்கள். பின்னர் நோர்வேயை நம்பினார்கள். இப்போது அமெரிக்காவை நம்புகிறார்கள்' என்று சொல்கிறார்கள். இப்படித்தான் பெரும்பாலான தமிழர்கள் கருதுக்கிறார்கள் என்பதையும் இங்கே பதிவு செய்ய வேண்டும். ஆனால், இப்படிக் குருட்டுத்தனமாக வெளிச் சக்திகளின் மீது நம்பிக்கை வைப்பது எந்த அளவிற்கு சாத்தியமானது? அது எத்தகைய நன்மைகளைக் கொடுக்கும் என்பதைப் பற்றியெல்லாம் தமிழர்கள் சிந்திப்பதில்லை. அப்படிச் சிந்திக்கும் ஒரு அரசியற் தெளிவை தமிழ் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள அரசியற் தலைமைகள் ஏற்படுத்தவும் இல்லை. அவைகளே இந்தச் சக்திகளுக்குப் பின்னர் நேர்த்திக்கடனுக்காகச் செல்வதைப் போலச் சென்று கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிச் சக்திகள் தமது தேவைகளுக்காக தமிழர்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருக்கின்றன. அல்லது அப்படிப் பயன்படுத்த விழைந்திருக்கின்றன. தமிழர்களும் அதீத நம்பிக்கையோடு 'வெளுத்ததெல்லாம் பால்' என்ற கணக்கில் இந்தச் சக்திகளின் பின்னே இழுபட்டிருக்கிறார்கள். ஆதிக்க சக்திகள் தமது நலன்களுக்காகவே எப்போதும் சிந்திக்கின்றன. அதைக் குறிவைத்தே அவை செயற்படுகின்றன என்ற மிகச் சாதாரண அரசியல் அறிவைக்கூடத் தமிழர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

தற்போது கூட இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வரக்கூடிய அளவில் தமது அரசியற் திறன்களையும் வியூகங்களையும் வகுப்பதற்குப் பதிலாக தமது நலன்களைப் பெறுவதில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளுக்காக தமிழர்களைப் பயன்படுத்த முனைகின்ற வெளிச் சக்திகளுடன் கூட்டுச் சேர்வதிலேயே இவர்கள் ஆர்வமாக இருக்கின்றனர்.

இந்த வெளிச் சக்திகள் தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எவ்வளவு தூரம் ஆக்கபூர்வமாகவும் சீரியஸாகவும் சிந்திக்கின்றன என்பது கேள்விக்குரியது. இதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பது இன்னும் வேடிக்கையானதும் துக்ககரமானதுமாகும்.

தமது தேவைகள் முடிந்தவுடன் இந்தச் சக்திகள் தமிழர்களைக் கழற்றி விடும் ஒரு யதார்த்தமே கடந்த காலத்தில் நடந்துள்ளது. இப்போதும் அது தான் நடக்கப்போகிறது. இதை மறுத்துரைப்போரிடம் இதற்கு என்ன உத்தரவாதமுண்டு? என்ன பதிலுண்டு?


எதிர்காலத்தில் மேற்குலகத்தின் அரசியல் நலன்களும் உபாயங்களும் மாறுபடும்போது தமிழர்களின் நிலை என்னவாகும் என்று சிந்திக்க வேண்டும். ஒரு சிறிய உடன்பாட்டோடு, சிங்களத் தரப்பு இந்தச் சக்திகளைத் தமக்கிசைவாகத் திருப்பி விடக்கூடும். சிங்களத்தரப்பிடம் அத்தகைய ராசதந்திர ஆற்றல் இருப்பதும் நாம் கவனிக்க வேண்டியது.

இனப் பிரச்சினையை தீர்வு நிலைக்குக் கொண்டு வருவதற்கு இலங்கை அரசுக்கு எப்படி அழுத்தத்தைக் கொடுப்பது? எனவே தற்போது இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் தரப்பினருடன் இணைந்து சமநேரத்தில் அழுத்தமொன்றைக் கொடுப்பது விவேகமானது, பொருத்தமானதுதானே என்ற கேள்வியும் சிலரால் முன்வைக்கப்படுகிறது. இதற்கான பதில் என்பது சிங்களச் சமூகங்களிடம் இதைப் பற்றிய புரிதலை ஆழமாக ஏற்படுத்த வேண்டும் என்பதாகவே இருக்கிறது. அதாவது, தமிழர்கள் எப்போதும் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் இல்லை. வெளிச் சக்திகளுடன் இணைந்து சிங்களவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கங்களைக் கொண்டவர்களும் இல்லை. இலங்கையைக் காட்டிக் கொடுப்பவர்களும் இல்லை என்ற சேதியைச் சிங்கள மக்களிடத்தில் தெளிவாக்க வேண்டிய பொறுப்பு தமிழர்களுக்கு உண்டு. அது கட்டாயமானது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பொலிஸாரின் நடமாடும் சேவையில் பொது நலத்திட்டங்களால் மக்கள் பயன்





(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய பொலிஸ் நடமாடும் சேவையின் போது யாழ். மக்களுக்குப் பல்வேறு அத்தியாவசிய சேவைகள் (மருத்துவம் உட்பட) வழங்கப்பட்டதுடன், முதியவர்கள் நால்வருக்கு சக்கர நாற்காலியும், சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு மின்சாரக் கட்டில்களும் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகிய இந்நடமாடும் சேவை பிற்பகல் 2.30 மணி வரை நடைபெற்றது.

யாழ்.பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி சமன் சிகேரா தலைமையில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில்,யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல்தளுவத்த, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நெவில் பத்மதேவா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, 51 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் இசட் விக்கிரமரட்ண மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, நான்கு முதியவர்களுக்கு (பெண்கள்) சக்கர நாட்காலிகள் வழங்கப்பட்டன.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நீல்தளுவத்த மற்றும் 51 ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் இசட் விக்கிரமரட்ண ஆகியோர் இவற்றை வழங்கி வைத்தனர்.

தொடர்ந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கான மின்சாரக் கட்டிலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல்தளுவத்தவும், ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கான மின்சாரக் கட்டிலை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் வழங்கி வைத்தனர்.

மேலும், இந்நிகழ்வில், பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, 51ஆவது படைப்பிரிவின் தளபதி, யாழ். மாநகர முதல்வர் ஆகியோர் உரையாற்றினர்.

மேல்நாட்டு வைத்தியம், கண் பரிசோதனை, மூக்குக் கண்ணாடி வழங்கல், இரத்தப் பரிசோதனை, பற்சிகிச்சை, ஆயுர்வேத மருத்துவ சேவை, மரக்கன்று விநியோகம், மீன்பிடி சம்பந்தமான விழிப்புணர்வூட்டல்,

திருமணப் பதிவு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பதிவு செய்தல், அடையாளஅட்டை பெற்றுக் கொள்ளாதவர்களுக்குப் அவற்றைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தல், சிறுவர் துஷ்பிரயோகம், முறைப்பாட்டுப் பிரதிகள் வழங்கல் என்பன தொடர்பான கோவைகள் வழங்கப்பட்டன.

பெருமளவான மக்கள் இந்நடமாடும் சேவையில் பங்குபற்றி பயன்பெற்றனர். (பா)

## கனேடிய பிரதமரின்...

ஒன்றில், பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் இந்த விவகாரம் தொடர்பாக வெளிப்படுத்திய நிலைப்பாட்டில் இருந்து தடுமாறவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். இந்தக் கலந்துரையாடலின் போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிதிருந்த கனேடியப் பிரதமர், மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகளுக்கு இலங்கை இடமளிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

மனிதஉரிமை நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால், கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்கும் நிலைப்பாட்டை ஏனைய தலைவர்களும் எடுக்க வேண்டும்.

நான் பிரதமாக இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளமுடியாது போனாலும் ஏனைய தலைவர்கள் இந்த நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் பொருத்தமான நடவடிக்கை எடுக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்றும் கனேடியப் பிரதமர் ஹாபர் கூறியிருந்தார்.

இது கனேடியப் பிரதமரின் கருத்து. ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதும், சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதும் 54 நாடுகள் அங்கம் வகிக்கும் கொமன்வெல்த் அமைப்பின் பணியே.

இந்த விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். இதனை மதிக்க வேண்டியது இலங்கையைப் பொறுத்த விடயம் என்று கனேடியப் பிரதமர் கூறியுள்ளார். இதுபற்றி அவுஸ்ரேலியாவில் கலந்துரையாடப்படும் என்று கனேடியப் பிரதமரின் தொடர்பாடல்களுக்கான இணைப் பணிப்பாளர் அன்ரூ மக் டௌகல் மேலும் கூறியுள்ளார்.

ஆனால், இந்த விவகாரம் குறித்து கொமன்வெல்த்தில் கலந்துரையாடத் தேவையில்லை என்று தமது நாடு கருதுவதாக கனடாவுக்கான இலங்கையின் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வரா கூறியுள்ளார். பேர்த்தில் பிளவுகளை உருவாக்க தாம் விரும்பவில்லை என்றும், கனடாவும் அதையே விரும்பும் என்று கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற கொமன்வெல்த் மாநாட்டில் 2013 இல் இலங்கையில் கொமன்வெல்த் தலைவர்கள் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டு விட்ட நிலையில், மீண்டும் இந்த விவகாரத்தை கையில் எடுப்பதை இலங்கை விரும்பவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். போரின் இறுதிக்கட்டத்தில் மனிதஉரிமை மீறல்கள் இடம்பெற்றதான குற்றச்சாட்டையும் இலங்கைத் தூதுவர் நிராகரித்துள்ளார்.. ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள் ஆதாரமில்லாத - அபாண்டமானவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளின்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, விடுதலைப் புலிகளின் அனைத்து இரகசியங்களும் தெரிந்தவன் நான் மட்டுமே. இந்த நிலையில் இலங்கைக்கு எதிராகச் சர்வதேசம் யுத்தக் குற்றம் தொடரபில் விசாரணைக்கு அழுத்தம் கொடுக்குமானால் அந்த நாடுகளுககும் புலிகளுக்கு மிடையிலான தொடர்புகளை அம்பலப்படுத்துவேன்.

இலங்கை வாழ். தமிழர்கள் தற்போது புலிகளுக்கு நிதி வழங்காமை காரணமாக இலங்கையில் மீண்டும் யுத்தம் ஒன்றை ஏற்படுத்த வெளிநாடுகளில் வாழும் புலிகள் முயற்சிக்கின்றனர் என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

## தேசிய...

கண்டுகளித்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரக்குமார திசநாயக்க, அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி, பேரவையின் தலைவர் புத்திகீர்த்திசேன ஆகியோரால் வியட்னாமிய முதற் பெண்மணி வரவேற்கப்பட்டார்.

## அமெரிக்க...

கோரிக்கை விடுத்திருந்தாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல்கள் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம், வொஷிங்டனில் உள்ள இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பிய கேபிள் தகவல்களை அடிப்படையாக கொண்டு, அந்த இணையத்தளம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூர் நோக்கி செல் லவே சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்திருந்தார். எனினும், இலங்கைப் படையினர் அவர் தங்கியிருந்த விடுதியைச் சுற்றிவளைத்திருந்ததுடன், அவர் போய்வரும் இடங்கள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வந்தன. இதன் பின்னர், சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, அவர் கைதுசெய்யப்பட்டதுடன், அவருக்கு எதிராக மேலும்பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த

போதிலும் வாக்களிப்பு முடிவடைவதற்கு அரை மணித்தியாலத்துக்கு முன்னர் ஏற்பட்ட அசம்பாவிதம் பெரும் பிரச்சினையைக் கிளப்பிவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, புதிய தேர்தல் முறைமை தொடர்பான உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை அடுத்த இரண்டு மாதங்களில் நிறைவேற்றப் போவதாகவும், இந்தச் சட்டமூலம் ஏற்கனவே இரண்டாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதி அமைச்சர் இந்திக்க குணவர்தன தெரிவித்துள்ளார். சட்டமூலத்தில் ஒரு சில திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் அதனை நிறைவேற்றும் வாய்ப்பு காணப்படுவதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

சட்டமூலம் நிறைவேற்றப் பட்டதும் நடைமுறையிலுள்ள விருப்பு வாக்குகளுக்கான போட்டித்தன்மை இல்லாதுபோவதுடன் தொகுதி ரீதியாக தாம் விரும்பிய பிரதிநிதியை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## மாவட்டத்தின்...

ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று நான் தெரிவிக்கவில்லை. எனது கருத்தை ஊடகங்கள் திரிபுபடுத்தி வெளியிட்டிருந்தால் அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது. குறித்த குற்றச்சாட்டுக்கள் குறித்து கல்லூரி அதிபர் தனது திணைக்களத்திற்கு அறிவித்திருக்க வேண்டும். அத்துடன், சம்பவம் தொடர்பாக விசாரித்திருக்க வேண்டும். அதைவிடுத்து மாணவிகளை கட்டாயப்படுத்தி சுலோக அட்டைகளை ஏந்திப் போராட்டம் செய்யத் தூண்டியிருக்கக் கூடாது.

'இவ்விடயம் தொடர்பாக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளேன். என்னை நம்பி குற்றச்சாட்டை எழுதியிருப்பவர்களை நான் காட்டிக்கொடுக்க முடியாது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை விட யாழ்.மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த ஜனவரியில் இருந்து சிறு பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் 114 ஆகவும், பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை 175 ஆகவும் காணப்படுகின்றது.

இது தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. மாதாந்தம் சிறுவர் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், திணைக்களங்களுடனான சந்திப்பிலேயே இவ்விடயம் சுட்டிக் காட்டப்படுகின்றது. இந்த துஷ்பிரயோக அதிகரிப்பிற்கு குறித்த குற்றத்திற்கான தண்டனை குறைந்திருப்பது தான் காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவே யாழ்.செயலகத்தில் விரைவில் பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடுபவர்களின் பெயர் விபரங்களை வெளியிடத் தனியான பிரிவும், பெண்களுக்கு எதிரான (சிறுமியர் அடங்கலான) வன்முறைகள் குறித்து முறைப்பாடு செய்யும் காரியாலயமும் அமைக்கப்படவுள்ளது.

மேலும், பெண்களுக்கு எதிரான வன்முறையினை கட்டுக்குள் கொண்டுவர யாழ்.மாவட்ட பெண்கள் அமைப்புக்களுடன் கலந்துரையாடி வருவதாகவும், பலாலி ஆசரியர் கலாசாலை மாணவிகள் பிரச்சினைக்கு திணைக்களத்தின் மூலமாகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (பா)

## தொல்பொருள்....

விடயம் இல்லை என்றும் கூறிவிட முடியாது. ஏனென்றால், எனது சொந்தப் பிரதேசமான கந்தரோடையிலும் பௌத்த சின்னங்கள் இருக்கின்றன. ஆனால் அந்தப் பௌத்தர்கள் நிச்சயமாகச் சிங்களவர்கள் அல்ல. சரித்திர ரீதியாகப் பார்க்கின்ற பொழுது அவர்கள் தமிழர்கள். அந்தக் காலத்தில் பல தமிழர்கள் பௌத்தர்களாக இருந்திருக்கின்றனர்.

எனவே சிங்களவர்கள் அங்கு வாழ்ந்தார்கள் என்று கூறுவதற்கு அதனைச் சான்றாகக் கொள்ள முடியாது. இந்த ரீதியில் 400 இடங்களில் சிங்களவர்கள் வாழ்ந்தார்கள் என்று பொய்கூறி உலகை நம்பவைப்பது பாரிய துரோகமாகும்.

இதன்மூலம் அந்த இடம் தமக்குச் சொந்தம் என்றுகூறி, இருக்கின்ற பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கி எம்மை மேலும் பலவீனமாக்கும் செயற்பாட்டையே இந்த அரசாங்கம் மேற்கொள்கிறது எனத் தெரிவித்துள்ளார்

## சொல்ஹெய்முடன்...

அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்தனர்.

எரிக் சொல்ஹெய்மையும் இலங்கை தூதுக்குழுவினருக்குமான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் நோர்வே வெளிநாட்டு அமைச்சில் நடைபெற்றது.

இலங்கையில் நடைபெற்ற யுத்த நிறுத்த மீறல்கள் இறுதி யுத்தம் ஐ.நா. செயலாளர் நாயகம் கடந்தவாரம் தமிழ் ஊடகத்துறைக்கு தெரிவித்த கருத்துகள் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை இலங்கையில் தொடரும் கொலைக் கலாச்சாரம், அபிவிருத்தி மற்றும் இடைத்தங்கல் முகாம் விவகாரம் உட்பட நீண்ட பேச்சுகள் நோர்வே அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெற்றதாக இலங்கை தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.


நோர்வேயில் தங்கி இருக்கும் இலங்கை அமைச்சர் குழு வினர் நோர்வேயில் பல சுற்றுப் பேச்சுகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகிறது.

## கொள்ளையில்...

வீட்டைவிட்டு வெளியேறும் போது அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்கள் என கொடிகாமம் பொலிஸ் தெரிவித்துள்ளது. மேலும், இந் நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்

செய்திப்பாணம்

**அரசதிபர் கூற்றினை ஆசிரியகலா சாலையினர்**
**திரமாக எதிர்க்கின்றனர் தினங்களாய் - அரசல்புரசலா**
**உண்மையதும் இல்லாமலா உருவானது காரியங்கள்**
**கண்ணைமூடிக் குடிப்பதும் காணா!**



# மாறுபட்ட அரசியல் கொள்கைகள் இருந்தாலும் அபிவிருத்தியில் அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

மாறுபட்ட அரசியல் கொள்கைகள் இருப்பினும் அபிவிருத்தியில் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டுமென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கரியாலை - நாகபடுவானில் புனரமைக்கப்பட்ட நெற் களஞ்சியத்தினை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் நீண்ட பெரும் யுத்தத்தின் காரணமாக எமது பிரதேசங்கள் பாரிய அழிவுகளை எதிர்கொண்டுள்ளன. அத்தோடு யுத்தம் நடைபெற்ற கடந்த முப்பது வருட காலமாக இங்கு எந்த விதமான அபிவிருத்தி செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாமல் போனது. இதன் காரணமாக மக்கள் இன்று பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே அவற்றிலிருந்து மக்கள் மீள்வதற்கு இக்காலப் பகுதி சாதகமாக அமைந்துள்ளது. இந் நிலையில் இக்காலப் பகுதியும் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுமானால் மக்கள் தொடர்தும் நலிவுற்ற நிலைக்கே தள்ளப்படுவர்.

இதேவேளை, மக்கள் மத்தியில் செயற்பட்டு வரும் மக்கள் அமைப்புக்களும் பலம் மிக்கதாக மாற்றம் பெற வேண்டும். அப்போதுதான் நடைபெற்று வரும் திட்டங்களின் செயற்பாடுகளை தரம் மிக்கதாகவும் விரைவுபடுத்தியும் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு அவ் அமைப்புக்கள் அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள தன்மனித நலன் சார்ந்த செயற்பாடுகள் தொடர்பான அறிவினையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலமும் மக்களுக்கு அதிக நன்மைகளைப் பெற்றுக் கொடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

முழங்காவில் கமக்கார அமைப்பின் தலைவர் ஞானசேகரம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடமாகான ஆளுநரின் பிரதிப் பிரதம செயலாளர் இராசநாயகம் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தயாரூபன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பூநகரி பிரதேச சபை உறுப்பினர்களான குகேந்திரன் மற்றும் சந்திரலோக ராசலிங்கம் ஆகியோரும் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை பூநகரியில் நிர்மாணிக்கப்பட்ட உரக்களஞ்சியத்தையும் சந்திரகுமார் எம்.பி. நேற்றையதினம் திறந்துவைத்தார்.

# மகளின் அரசியல் பிரவேசம் விருப்பம் கொண்டிராத தாய்



(கொழும்பு)

தனது மகள் அரசியலில் பிரவேசிப்பது தனக்குச் சற்றுமே விருப்பம் இல்லை என முல்லேரிய படுகொலைச் சம்பவத்தில் படுகொலையுண்ட கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் பாரியாரான சுமனா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

எனது கணவர் அரசியலில் ஈடுபட்டதே போதும். அவர் அரசியலில் ஈடுபட்டு எதனையும் சம்பாதிக்கவில்லை. இப்போது எனது மகள் ஹிருனிகா அரசியலில் ஈடுபடுவது பற்றிப் பேசப்படுகிறது. இந்த விடயத்தில் மகளுக்கு நான் பல விடயங்களை விளக்கியுள்ளேன். அரசியலில் ஈடுபட வேண்டாம் என்றும் கூறியுள்ளேன். இதனை எனது தனிப்பட்ட வேண்டுகோளாகவே அவரிடம் விடுத்துள்ளேன். ஆனால், அவர் இது தொடர்பில் தீர்க்கமான முடிவு எதனையும் எடுக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

# குடாநாட்டில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை

## யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கிராம சேவகர் பிரிவு ரீதியாக சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு மக்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு வருவதாக யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த தெரிவித்துள்ளார்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற பொலிஸ் நடமாடும் சேவையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டத்தின் ஒரு அங்கமாக சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளாக சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாண பிரதேசத்திலும் காங்கேசன்துறையிலும் பொலிஸாரால் கொண்டாடப்பட்டது.

சுமார் 2 மில்லியன் ரூபா செலவில் இந்நிகழ்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதன்மூலம் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த முடிந்துள்ளது.

யுனிசெப், யு.என்.எச்.சி.ஆர் போன்ற நிறுவனங்களினதும் பொலிஸ் திணைக்கள அதிகாரிகளினது நிதியுடனேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த தசாப்தகாலங்களில் இப்படிப்பட்ட நடமாடும் சேவையை இங்கு நடத்துவோம் என்று எண்ணியிருந்தோமா? ஆனால் அது இன்று கைகூடியிருக்கின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொதுமக்களாகிய உங்களது பிரச்சினைகள் குறித்தே அதிகம் எங்களுடன் தொடர்பு கொள்ளுவார். தொடர்புகொண்டும் வருகிறார். அவருடன் இணைந்து நாமும் யாழ். மக்களுக்குத் தேவையான மேலும் பல நன்மையான காரியங்களை செய்ய முன்வருவோம் எனவும் குறிப்பிட்டார். (பா)

# ஹோட்டல் என்ற போர்வையில் கருக்கலைப்பு, விபசார நிலையம்

ஹோட்டல் என்ற போர்வையில் விபசாரம் மற்றும் கருக்கலைப்பு மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையத்தினை மாத்தளை குற்றத் தடுப்பு பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர்.

இதன் போது மூன்று பெண்கள் உட்பட அறுவரை' கைது செய்துள்ளதுடன் கருக்கலைப்புக்காக பயன்படுத்தப்பட்ட கருவிகளையும் மீட்டுள்ளனர்.

மாத்தளை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவ்ர்களில் மாத்தளை வைத்தியசாலையின் சுகாதார சேவை ஊழியரான பெண்ணொரு வரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ் ஊழியரே கருக்கலைப்பு நடவடிக்கைகளை பெருமளவில் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றிவளைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சுமார் 26 வயது மதிக்கத்தக்க பதுளை மற்றும் தெனியாய பகுதிகளை சேர்ந்த இரு பெண்களும் கருக்கலைப்புக்காக அங்கு இருந்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மாத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாதுகாப்பு அமைச்சின் பெயரில் மாற்றம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்காலத்தில் இந்த அமைச்சு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படும்.

இதன்படி நகர அபிவிருத்தி தொடர்பான அனைத்து விடயங்களும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லசந்த கொலையின் சந்தேகநபர் உயிரிழப்பு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்த ஜேசுதாசன் (வயது - 36) என்பவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு முன்னர் தெரிவித்துள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர், கடந்த 13 ஆம் திகதி சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 44 ஆவது விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

# வெளிநோயாளர் பிரிவுகளை கண்காணிக்க விசேட குழு

(கொழும்பு)

இரவு வேளைகளில் வெளிநோயாளர் பிரிவுகள் இயங்குகின்ற வைத்தியசாலைகளின்-செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு விசேட விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளினதும் வெளிநோயாளர் பிரிவுகள் இரவு 8 மணிவரை திறந்திருக்க வேண்டும். எனினும் சில வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளின் செயற்பாடுகள் உரியவாறு முன்னெடுக்கப்படுவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது. இதன்படி விசாரணைக் குழுவினால் வெளிநோயாளர் பிரிவுகளின் மருந்து விநியோகம், சிற்றுண்டிச் சாலைகளின் செயற்பாடுகள் ஆகிய விடயங்கள் குறித்து தகவல்கள் திரட்டப்படவுள்ளன.

அத்துடன் இரவு வேளைகளில் அந்தந்த பிரிவுகளுக்கு ஊழியர்கள் உரிய முறையில் செல்கின்றனரா, எனபது தொடர்பாகவும் அவர்களின் சீருடை தொடர்பாகவும் ஆராயவுள்ளதாக அமைச்சு குறிப்பிடுகிறது.

இதுதொடர்பான அறிக்கை சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டதும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வியட்னாம் தூதரகம் கொழும்பில் திறப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதன் முறையாக வியட்னாமுக்கான தூதரகம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வியட்னாம் தூதரகத்தை உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள வியட்னாம் ஜனாதிபதி ட்ரேங் டென் செங்க் நேற்றுக் காலை 10 மணியளவில் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜயரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். புதிதாக அமைக்கப்பட்டுள்ள வியட்னாமுக்கான தூதரகம் கொழும்பு வோர்ட் பிளேஸில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.